வார இதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT




No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர் - 02 | இதழ் - 25 | 24.07.2024 - 31.08.2024 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | ஊக்குவிப்பு : ரூ.80.00

# தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம்!

## புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து





பக்கம் 04

# கறுப்பு ஜுலையும்

# இனவாதக் கோட்பாடும்!





பக்கம் 07

தேசியம் THESIYAM www.thesiyamnews.com

ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# கொள்கை ஒன்றே முக்கியம்

ஜனாதிபதி தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்துக்கான வர்த்தமானி அறிவித்தலை கடந்தவாரம் வெளியிட்டிருந்தார். அது ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கான முயற்சியாகவே எல்லோராலும் பார்க்கப்படுகிறது. இருந்தாலும், ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் நிலைப்படுத்தப்படாத ஒன்றை அவர் செய்துமுடிக்க நினைக்கிறார் என்று சிலரது கருத்து உள்ளது. இருந்தாலும், ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவது முழு நாட்டிற்கும் நன்மை பயக்கும். அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கு நன்மையே என்ற ஒரு கதையை ஓய்வு பெற்ற நீதியரசரும், முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் அடித்துவிட்டார்.

அதற்கு அவர் சொன்ன காரணங்கள் பெரிதாகக் கூறக்கூடிய காரணங்கள் அல்ல. “ஜனாதிபதி தேர்தலை பொறுத்தவரைக்கும் வேட்பாளர் எவரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெறமுடியாத நிலைமை காணப்படுகிறது. அதனால் அவர்கள் சிறுபான்மையின மக்களின் வாக்குகளை பெற வேட்பாளர்கள் முனைப்பு காட்டுவார்கள். அதேநேரம் ஜனாதிபதி தேர்தலில் எவரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெறாத நிலைமை ஏற்படும் போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் போகும். ஏற்கனவே நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படுகிறது. அந்நிலையில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாது போனால் நாடு மிக மோசமான பொருளாதார பின்னடைவுகளை சந்திக்க நேரிடும். அத்துடன் தேர்தலுக்காக பெருமளவான நிதிகள் செலவழிக்கப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படும். அதுவும் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும்” என்பவையே அவர் சொன்ன காரணங்களாகும்.

இன்றைக்கோ நாளைக்கோ அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்திருக்கும் ஜனாதிபதித் தேர்தல் பற்றியும் அது தொடர்பில் நடைபெற்றுவருகின்ற வாதப்பிரதிவாதங்கள், வேட்பாளர் தெரிவு தொடர்பான முயற்சிகள் கொஞ்சம் சிக்கலாகியிருக்கின்ற நிலையிலேயே அவர் அந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார்.

வேட்பாளர் தெரிவுகள் பெரும்பான்மைக் கட்சிகளுக்கான நெருக்கடியாக அறிவிக்கப்படவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் இருக்கிறது என்றாலும் தமிழர் தரப்பில், தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் என்பவர் எவ்வாறு தீர்மானிக்கப்படுவார். அவர்களுடைய முதல் நிலைப்பாடு, இரண்டாவது நிலைப்பாடு என்ன என்பது தெரியாமலேயே இருக்கின்ற நிலையில் கடந்த திங்கட்கிழமை தமிழ்த் தேசியப் பேரவையின் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்புக்காக புரிந்துணர்வு உடன்பாடு யாழ்ப்பாணத்தில் கைச்சாத்திடப்பட்டிருகிறது.

இந்த இடத்தில், தமிழ் மக்கள் ஆண்டாண்டு காலமாக எதிர்பார்க்கின்ற தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையை அடைந்து கொள்வதற்கு தமிழ் ஜனாதிபதி பொது வேட்பாளர் களமிறக்கல் எவ்வாறு சாதகமானதாக இருக்கும் என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. அனைத்து தமிழ் அரசியல் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய கட்டாயத்திலிருக்கும் நிலையில் தமிழர்களின் அரசியல் தலைமைகள் இதில் இன்னமும் ஒற்றுமைப்படவில்லை. தமிழ் மக்களுக்கான அரசியலைச் செய்யும் அரசியல் கட்சிகளான இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருக்கின்ற அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகியன முழுமையான எதிர்ப்பினையே தெரிவித்துவருகிறது. அத்துடன் இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்படவுமில்லை.

ஜனாதிபதி தேர்தலை பொறுத்தமட்டில் எந்தவொரு பிரதான வேட்பாளரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெறப்போவதில்லை என்பது நிச்சயம். இது போலவே கடந்த 2020இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் எதிர்வு கூறல்கள் காணப்பட்டன. இருந்தாலும் கோத்தபாய ராஜபக்ச 69 லட்சம் வாக்குகளைப் பெற்று பெரும்பான்மையுடையவரான ஜனாதிபதியாகியிருந்தார். இருந்தாலும் தற்போதைய நிலையில் வெளிவருகின்ற எதிர்வுகூறல்கள் பலிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்றே கொள்ளமுடிகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்தத் தேர்தலைக் கணிப்பிடுகின்றார். அதே நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணி- தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராகக் களமிறங்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க அரகலயவின் அதிர்வுகளில் நம்பிக்கை கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தினை நீடிப்பது, ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பது என பலவாறாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் தேர்தலைப் பிற்போடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு போன்றன தோல்வியடைந்த யுக்திகளாகப் போயிருக்கின்றன. இவற்றுக்குப் பின்னால் ஜனாதிபதி ரணில் இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டும் இருக்கின்றன.

2022 அரகலய கிளர்ச்சிக்குப் பின்னர் 2 வருட காலம் இழுத்தடிக்கப்பட்டு நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் முடிவு எப்படியிருக்கும் என்ற கவலை பொதுவில் இருந்தாலும் தமிழர்களது தரப்பில் தம்முடைய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் ஒரு படியாக இந்தத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும் என்பதே நோக்கமாக இருக்கிறது. இது நல்ல முயற்சியே. இருந்தாலும் அது பயன்படுத்தக் கூடிய முயற்சியாக இருக்குமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது.

ஒரு சில முயற்சிகளை மேற்கொண்டு தோற்றுப்போவதோடு இதனையும் சேர்த்துக் கொள்வதாகக் கொள்ளமுடியாத அளவுக்கு இலங்கை சுதந்திரமடைந்ததுமுதல் எண்ணிலடங்கா முயற்சிகளை மேற்கொண்டு தோற்றுப்போன தமிழர்கள் செய்யும் இந்த தமிழ் பொது வேட்பாளருக்கான முயற்சி இன்னொரு பிரச்சினையாக இருக்கிறது.

தமிழர்கள் தமக்குள் ஒற்றுமைப்படுவதில் உள்ள சிக்கல்கள் சுயநிர்ணயப் போராட்டத்தினை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்லவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததென்ற நிலையில், பேரினவாதத் தரப்பானது சிறுபான்மை மக்களை பிரித்தாளும் முயற்சிகளில் மேலும் சிக்காது விரோதங்களை வளர்க்காது தமிழர்களிடையே முரண்பாடுகளில்லாச் சூழல் உருவாக்கப்படவேண்டும். இதற்காக மிகக் கனகச்சிதமான முயற்சிகளை முன்நகர்த்தி அரசியல் ரீதியானதும், அனுபவ ரீதியானதுமான பட்டறிவுகளைப் பயன்படுத்தி தமிழ் வேட்பாளருக்கு பலம் சேர்க்கவேண்டும்.

அதற்காக, தமிழ் மக்களுக்கு கொள்கை ஒன்றே முக்கியம் என்ற சிந்தனையுடன் தமிழர்களது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுவிடாதா என்ற எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கின்ற பேரினவாத சக்திகளுக்கு இடங்கொடாது முன்நகர்வோம். விட்டுக் கொடுப்புகளை நம் தமிழ் அரசியல் தலைமைகள் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் நோக்கத்துக்கான நிலைப்பட்டுக்காக மேற்கொள்வோம். கருத்து வேறுபாடுகளிருந்தாலும் கருத்தொருமிப்போம். நிலைப்பாடொன்றே உறுதியாயிருக்கட்டும்.

**ஆசிரியர்**

# தமிழ் மக்கள் கூட்டணியின்

## தேசிய மாநாடு யாழில் நடைபெற்றது!

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். தந்தை செல்வா கலையரங்கில் நடை பெற்றது.

அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் உட்படபலர் பங்கேற்றனர்.

மங்கள வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, மாலைகள் அணிவிக்கப்பட்டு, கட்சிக் கொடி ஏற்றப்பட்டு, மங்கள விளக்கேற்றலுடன் மாநாடு ஆரம்பமானது.

மங்கள விளக்கை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், க.வி.விக்னேஸ்வரன், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, யாழ். பல் கலைக்கழக அரசியல் துறைத்தலைவர் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம், யாழ். மாநகர முன்னாள் மேயர் சட்டத்த ரணி விஸ்வலிங்கம் மணிவண்னன், நல்லூர் பிரதேச சபை யின் முன்னாள் தவிசாளர் மயூரன், பேராசிரியர் கந்தையா சர் வேஸ்வரன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்கள் ஏற்றி வைத்தனர்.

போரில் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கான பொது நினைவுச்சுடரை க.வி.விக்னேஸ்வரன் எம்.பி. ஏற்றிவைத்தார். அத்துடன், அண்மையில் மறைந்த தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன.







# சாவகச்சேரி மருத்துவமனை விவகாரம்: 15 பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டது!



யாழ் சாவகச்சேரி மருத்துவமனையில் காணப்படும் குறைபாடுகளுக்கு தீர்வு காணும் நோக்கில் மாதாந்தம் ஒரு கலந்துரையாடலை நிர்வாகத்துடன் மேற்கொள்வதற்காக 15 பேர் கொண்ட அபிவிருத்திக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட சமூக மட்ட அமைப்பினர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் உள்ள குறைபாடுகள் என மருத்துவர் இ.அர்ச்சுனா முன்வைத்தவை உட்பட 16 குற்றச்சாட்டுக்களை எழுத்து மூலம் அமைச்சரிடம் வழங்கினர்.

இந்த 16 குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் விபரமாக கலந்துரையாடப்பட்டது. இவற்றில் உடனடியாக தீர்வு காணக் கூடியவற்றை உடன் தீர்க்குமாறு பணித்த அமைச்சர், ஜனாதிபதி, துறைசார் அமைச்சரான ரமேஷ் பத்திரணவுடன் பேசி ஏனைய பிரச்சினைகளை உடன் தீர்த்துத் தருவதாக உறுதியளித்தார்.

# தமிழ்த் தேசியப் பேரவை மற்றொரு மூத்தோர் குழாமா?




> தற்போதுள்ள அரசியல் கட்சிகளையும் அதன் தலைமைகளையும் ஓர் அணிக்குள் இணைத்து விடயங்களை முன்னெடுப்பது என்பது அவ்வளவு இலகுவானது அல்ல. தேர்தல் – வாக்கு அரசியல் வெற்றி தோல்விகள் குறித்தெல்லாம், கட்சிகளும் அதன் தலைமைகளும் ஆலோசித்துத்தான் முடிவெடுக்கும். அதிலும், அந்தக் கட்சிகளின் மீதான அக – புறச் சக்திகளின் அழுத்தங்கள், நாளுக்கு நாள் தீர்மானங்களை மாற்றும் வல்லமையுள்ளவை.

## இரா.சம்பந்தன் ஒரு தோற்றுப்போன தலைவர்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் கோதாவில் இறங்கியிருக்கின்ற அரசியல் பத்தியாளர்கள் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினரின் செயற்பாடுகள் சற்றுத் தேக்க நிலையை அடைந்திருப்பதாக தெரிகின்றது. யாழ்ப்பாணத்தில் "மக்கள் மனு" என்ற பெயரில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும்



யோசனையோடு இறங்கிய குழுவினர், நாளும் பொழுதும் ஊடகங்களுக்கு பரபரப்பாக செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள். புதிதாக செய்திகளை வழங்க முடியாதபோது, தமிழ் சிவில் கட்டமைப்பு, தமிழ் மக்கள் பொதுச்சபை, தமிழ்த் தேசியப் பேரவை என்று வாரத்துக்கு ஒருதடவையேனும் தங்களின் பெயரைப் புதுப்பித்து ஊடகங்களுக்கு அறிவித்தார்கள். ஆனால், கடந்த சில வாரங்களாக எந்தச் சலனத்தையும் காணவில்லை.

குறிப்பாக, இந்த மாதத்தின் முதல் வாரத்தில், பொது வேட்பாளர் விடயத்தில் இணங்கியிருக்கின்ற அரசியல் பத்தியாளர்களுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அப்படியான எவையும் நடைபெறவில்லை. மாறாக, அந்தக் குழுவில் இருக்கின்ற பத்தியாளர்களும் கட்சியினரும், "இரா.சம்பந்தன் ஒரு தோற்றுப்போன தலைவர்" என்ற விடயத்தை முன்வைத்து உரையாடுவதில் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த உரையாடல்களின் நீட்சியைப் பார்த்த மூத்த ஊடகவியலாளரான வீ.தனபாலசிங்கம், "தமிழ்த் தேசிய அரசியலில் வெற்றி பெற்ற தலைவர் யார்?" என்ற தொனிப்பட கேள்வி எழுப்பியிருந்தார். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தந்தை செல்வா மறைந்த போதும், தலைவர் பிரபாகரன் களத்தில் போராடி வீழ்ந்த போதும், சம்பந்தன் இன்று விமர்சிக்கப்படும் அளவைத் தாண்டிய விமர்சனத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள். அதுவும், தமிழ்ப் பரப்பில் சாம்பல் அரசியலை செயற்பாட்டு நெறியாக கைக்கொள்ள வேண்டும் என்று போதிக்கும் மூத்த பத்தியாளர்களில் சிலர், தலைவர் பிரபாகரனை தோற்றுப் போன தலைவர் என்று மாத்திரமல்ல, அவரை மரணத்தின் தூதுவன், பாசிசவாதி என்ற அடையாளங்களைக் கொண்டு விமர்சித்திருக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னரான காலத்தில் வெளியான அந்த விமர்சனங்கள், ராஜபக்ஷக்களினதும் அவர்களின் துணைக்குழுக்களினதும் அழுத்தங்கள் காரணமாக முன்வைக்கப்பட்டிருக்கலாம் என்ற உணர்நிலை இந்தப் பத்தியாளரிடம் உண்டு. இன்னமும் அந்த விமர்சனங்கள் இணையம் பூராவும் கொட்டிக் கிடக்கின்றன. நிர்ப்பந்தங்களினால், முன்வைக்கப்படும் விமர்சனங்களை அவ்வளவுக்கு கருத்தில் கொள்ளத் தேவையில்லை என்ற அளவில் அவற்றைக் கடந்துவிடலாம். ஆனால், அந்த விமர்சனங்களை, அதன் நீள அகலங்களை அறியாத சில புலம்பெயர் தரப்புக்கள், சம்பந்தனின் தோல்வி தொடர்பில் இந்தப் பத்தியாளர்களின் உரையாடல்களைத் தூக்கிச் சுமக்கும் போதுதான், தனபாலசிங்கம் எழுப்பிய கேள்வியின் நியாயம் மேலேழுகின்றது.

களத்தில் நேரடியாக இறங்கி செயற்பாட்டு அரசியலை முன்னெடுப்பதற்கும் விமர்சனங்களைச் செய்வதற்கும் இடையில் பாரிய இடைவெளி உண்டு. அதனை உணராது கடந்த காலங்களில் மூர்க்கமான விமர்சனங்களை அரசியல் தலைமைகள், கட்சிகள் மீது முன்வைத்து வந்த பத்தியாளர்களில் ஒரு தரப்பினர்தான், இப்போது தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை தூக்கிச் சுமக்கிறார்கள். அரசியல் தீர்மானங்களும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் இடையில் எதிர்கொள்ள வேண்டிய நடைமுறைச் சிக்கல்கள் என்னென்ன என்பதை இப்போதுதான், அவர்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலோ, வவுனியாவிலோ கூடிப் பேசுவது மட்டுமல்ல, அங்கு பேசப்பட்ட விடயங்களை அடுத்த கட்டங்களுக்கு நகர்த்துவது என்பது தலையால் நடக்க வேண்டிய அர்ப்பணிப்பைக் கோருவதாகும். அதிலும், தற்போதுள்ள அரசியல் கட்சிகளையும் அதன் தலைமைகளையும் ஓர் அணிக்குள் இணைத்து விடயங்களை முன்னெடுப்பது என்பது அவ்வளவு இலகுவானது அல்ல. தேர்தல் – வாக்கு அரசியல் வெற்றி தோல்விகள் குறித்தெல்லாம், கட்சிகளும் அதன் தலைமைகளும் ஆலோசித்துத்தான் முடிவெடுக்கும். அதிலும், அந்தக் கட்சிகளின் மீதான அக – புறச் சக்திகளின் அழுத்தங்கள், நாளுக்கு நாள் தீர்மானங்களை மாற்றும் வல்லமையுள்ளவை. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை முதன்முதலில் அரங்குக்கு கொண்டு வந்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியிலுள்ள கட்சியினரே, கடந்த சில மாதங்களில் மாறி மாறி முடிவெடுத்திருக்கிறார்கள். அவர்களிடம் நிலையான தீர்மானம் என்ற ஒன்று இல்லை. கடந்த சில வாரங்களுக்கு முன்னர், இந்தியத் தூதரைச் சந்தித்துவிட்டு வந்த, கட்சியினரிடம் தடுமாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அதனால்தான், தமிழ்த் தேசியப் பேரவையினரிடம் ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தள்ளிப்போயிருப்பதாக கூறப்படுகின்றது. அதுபோக, தற்போது ஆடி மாசம் பிறந்துள்ளதால், இப்போது புதிய விடயங்களை ஆரம்பிப்பது நல்லதல்ல என்பது, இன்னொரு அரசியல் தலைவரின் நிலைப்பாடு. அதுவும்கூட ஒப்பந்தம் கைச்சாத்திடுவதை தாமதமாக்கின்றதா என்று தெரியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் நெருங்கிவிட்டது. ரணில் விக்ரமசிங்க குழப்பங்களை ஏற்படுத்தி தேர்தலை ஒத்திவைக்கும் நாடகத்தை அரங்கேற்றாமல் விட்டால், தேர்தலுக்கு இருப்பது குறைந்த நாட்களே. ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதற்கான காலம் ஏற்கனவே வந்துவிட்டது. தேர்தல் ஆணைக்குழு நினைத்தால், அதனைச் செய்யலாம். சோதிடம் பார்த்து அதன் பிரகாரம், நல்ல நாள் – நேரத்தின் படிதான், அறிவிப்புச் செய்யப்பட வேண்டும் என்ற அழுத்தத்தினால் தேர்தலுக்கான அறிவிப்பு தள்ளிப் போய்கொண்டிருக்கலாம். எதுவாக இருந்தாலும், தேர்தல் மிக நெருக்கத்தில் வரப்போகின்றது. அதற்குள் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் தரப்பினர், தங்களுக்கு இடையில் உடன்பாட்டு ஒப்பந்தத்தைச் செய்து, வேட்பாளரை தேடிக் கண்டுபிடித்து அறிவித்தாக வேண்டும். ஆனால், அப்படியான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக தெரியவில்லை. மாறாக, அவர்களும் அடுத்த கட்டம் தொடர்பில் நிச்சயமற்ற தன்மையினால் அல்லாடுகிறார்கள்.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை முன்னெடுக்கும் பத்தியாளர்கள் உள்ளிட்ட தரப்பினர் தொடர்பில் சமூக செயற்பாட்டாளர் ஒருவர், கீழ்க் கண்டவாறு கருத்து வெளியிட்டார். "பொது வேட்பாளர் விடயத்தை இப்போது முன்னெடுக்கும் தரப்பினர் யார் என்று பார்த்தால், அவர்களும் மற்றோர் தமிழ் மூத்தோர் ஆடவர் குழாம் (Tamil uncle club) தான். அங்கும் பெண்களுக்கும் அவர்களின் கருத்துக்களுக்கும் இடமில்லை. இப்போது அவர்கள், பொது வேட்பாளர் காவடியைத் தூக்கிவிட்டார்கள், அதனை எப்படி இறக்கி வைப்பது என்ற மனச் சங்கடத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தற்போது போட்டி போடுவது மற்றவர்களோடு அல்ல. மாறாக, தங்களின் தன்முனைப்பு மனநிலையுடன்…" என்று.

தமிழ்த் தேசிய அரசியலை ஓய்வூதியர்களும், மூத்தோரும் ஆக்கிரமித்துக் கொள்வது வழமையானது. எழுபதுகளின் இறுதியில், தமிழ் அரசியலை இளைஞர்கள் கையில் எடுக்க ஆரம்பித்த போது, அப்போதிருந்த மூத்தோர், "இந்தப் பெடியள் எல்லாவற்றையும் குழப்பப் போகிறார்கள்" என்று பேசினார்கள். ஆனால், வெற்றி தோல்விகளுக்கு அப்பால், அந்த இளைஞர்களிடம்தான், முப்பது ஆண்டுகால தமிழ்த் தேசியப் போராட்டம் இருந்தது. அப்போது இளைஞர்களாக இருந்தவர்களில் இன்று மூத்தோர் ஆகிவிட்ட சிலர், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களின் இளம் வயதில், இருந்த துணிவோடும் அர்ப்பணிப்போடும் இல்ல. அவர்களில் அநேகர் வாக்கு அரசியலுக்கான மனிதர்களாக தங்களைச் சுருக்கிக் கொண்டு, மூத்தோர் அரசியலின் பங்காளிகள் ஆகிவிட்டார்கள். அவர்களைப் போலவே, தமிழ்த் தேசியப் பேரவையில் இருக்கின்ற பத்தியாளர்களும் இயங்க நினைக்கிறார்கள். தங்களின் எண்ணங்களைத் தாண்டி கருத்துக்கள், உரையாடல்களில் வலுப்பெறுவதை அவர்கள் விரும்பவில்லை. பெண்களின் கருத்துக்களை அவர்கள் கண்டு கொள்வதில்லை. பெண்களை, தாங்கள் முன்வைக்கும் தீர்மானங்களை அங்கீகரித்து கைச்சாத்திடும் தரப்பினராகவே கைக்கொள்ள நினைக்கிறார்கள். அதனால்தான், தமிழ்த் தேசியக் கட்சிகள் போல, தமிழ் சிவில் அமைப்புக்கள் தொடங்கி இன்று புதிதாக நாமம் பெற்றுள்ள தமிழ்த் தேசியப் பேரவைக்குள் இருந்தும் பெண்களின் குரல்களைக் கேட்க முடியவில்லை.
பொது வேட்பாளராக பெண்கள் யாரையாவது முன்னிறுத்தலாம் என்ற உரையாடல்



# தமிழ்த் தேசிய அரசியலில் வெற்றி பெற்ற தலைவர் யார்?

தமிழ்த் தேசியப் பேரவைக்குள் நிகழ்ந்திருக்கின்றது. அந்தப் பெண்ணின் அடையாளம் என்பது, முன்னாள் போராளியின் மனைவி, மகள், அரசியல்வாதிகளின் வாரிசு என்ற அளவைத் தாண்டி அடுத்த கட்டத்துக்கு நகரவில்லை. யாரோ ஒரு ஆணின் அடையாளத்தினால் முன்னிறுத்தப்படும் வாரிசுப் பெண்களைக் குறித்துத்தான் சிந்திக்கிறார்கள். சுயாதீன சிந்தனையுள்ள பெண்களை முன்னிறுத்துவது தொடர்பிலான உரையாடல்கள் பத்தியாளர்கள் மத்தியிலும் இல்லை. தெற்காசிய அரசியலில் பெண்களின் அரசியல் வகிபாகம் என்பது, வாக்களிப்பவர்கள் என்ற அளவைத் தாண்டி பெரிதாக உயரவில்லை. நேரடி அரசியலில் இருக்கும் பெண்களில் தொண்ணூறு வீதத்தினர் வாரிசு அரசியலினால் அடையாளம் பெற்றவர்கள். பெண்களுக்கான இடஒதுக்கீடு என்ற நிர்ப்பந்தத்தினால், பெண் வாரிசுகளை கட்சிகள் உள்வாங்குவது வழக்கம். அதனைத்தான், தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இருக்கின்ற கட்சிகளும் செய்து வந்திருக்கின்றன. இலங்கை அரசியலில் சிறீமாவோ பண்டாரநாயக்க தொடங்கி சந்திரிக்கா குமாரதுங்க, அனந்தி சசிதரன், விஜயகலா மகேஸ்வரன் வரையில் வாரிசு அரசியலின் அடையாளங்கள் தான். தொடர்ச்சியாக கருத்துருவாக்கத்தைச் செய்து வருகின்ற தமிழ்த் தேசியப் பேரவையின் பத்தியாளர்களும், பெண் அரசியல் வாரிசுகளை தங்களின் வேட்பாளராக முன்னிறுத்தும் உரையாடல்களை முன்னெடுப்பதும் ஆணாதிக்க மனநிலையினால்தான். ஏனெனில், அவர்களுக்கு தாங்கள் சொல்வதை கேட்டு செயற்படும் ஒருவர்தான் தேவைப்படுகிறார். அதற்கு, அரசியல் பெண் வாரிசுகள் என்றால், இலகுவானது என்பது அவர்களின் நிலைப்பாடு. தமிழ்த் தேசியப் பேரவையின் தீர்மானிக்கும் குழுவாக அறிவிக்கப்பட்ட குழுவில், பெண்கள் என்று யாரையும் காண முடியில்லை. அதன் பிரகாரமும், அவர்கள் ஒரு தமிழ் மூத்தோர் ஆடவர் குழாம் (Tamil uncle club) என்பதை அவர்கள் நிரூபிக்கிறார்கள்.

தன்முனைப்பு மனநிலையை தூர வைத்து விட்டு செயற்பாட்டு அரசியலுக்கு வராத எந்த நபரினாலும், அரசியலில் நல்ல மாற்றங்கள் சாத்தியமில்லை. அது, தமிழ்த் தேசிய அரசியலில் இருக்கும் அனைவருக்கும் பொருந்தும். தனிப்பட்ட கோபதாபங்கள் - இலாப நட்டக் கணக்குகளுக்கு அப்பாலான, மனநிலையுள்ள அனைவரையும் சமமாக நோக்கும் அரசியல் தமிழ்த் தேசிய அரங்கில் பிறக்க வேண்டும். இல்லையென்றால், தொடர்ந்தும் மேலிருந்து தீர்மானங்களை எடுத்து விட்டு, மக்களிடம் இறக்கி வைக்கும் திணிக்கும் அரசியல் கோலொச்சும். முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான அரசியலில் சம்பந்தனும் எம்.ஏ.சுமந்திரனும் தீர்மானங்களை எடுத்துவிட்டு மக்களின் தலையில் இறக்கி வைக்கும் வேலைகளை மாத்திரமே செய்து வந்திருப்பதாக தமிழ்த் தேசியப் பேரவைக்குள் இருக்கும் அரசியல் பத்தியாளர்களும், கட்சியினரும் தொடர் விமர்சனங்களை முன்வைத்து வந்திருக்கிறார்கள். அப்படியான நிலையில், இவர்கள் யாரோடு உரையாடி என்ன வகையிலான கருத்துக்களை உள்வாங்கி பொது வேட்பாளர் கோசத்தோடு வந்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது. யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் தாங்கள் கூடிப் பேசிவிட்டு தீர்மானங்களை அறிவித்துவிட்டு, அதனை மக்களின் முடிவு என்று அறிவிக்கும் அதிகாரத்தை இவர்களிடம் யார் வழங்கியது?

தமிழ்த் தேசிய அரசியலில் வட்டுக்கோட்டைத் தீர்மானமும், சுதுமலைப் பிரகடனமும் முக்கியமாவை. அவற்றின் வெற்றி தோல்விகள் தொடர்பிலான உரையாடல்கள் இருந்தாலும், அவை இரண்டுக்கும் குறித்தளவு அரசியல் முக்கியத்துவம் இன்றும் உண்டு. அந்தப் பெயர்கள் தமிழர் அரசியலில் ஆளுமை செலுத்தியவை. தமிழ்த் தேசியப் பேரவையாக நாமம் சூட்டுவதற்கு முன்னர், அரசியல் பத்தியாளர்கள் உள்ளடங்கிய தரப்பினர், “வவுனியா தீர்மானம்“ என்ற ஒன்றை அறிவித்தார்கள். அதனை, ஊடகங்கள் அவ்வளவுக்கு தூக்கிச் சுமக்கவில்லை என்றபோதிலும், இன்றைய பேரவையினர் அப்போது கூட்டிய நாமம், வவுனியா தீர்மானம் என்பதாகும். ஏற்கனவே, “இமயமலைப் பிரகடனம்“ என்ற பெயரில் அக - புறத் தரப்பினர், ஒரு கோமாளிக் கூத்தை சில மாதங்களுக்கு முன்னர், ஆடியிருந்தார்கள். வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்குப் பின்னரான தமிழ்த் தேசியப் போராட்டத்தை அர்ப்பணிப்போடு தூக்கிச் சுமந்தவர்களினால்தான், சுதமலைப் பிரகடனம் முன்வைக்கப்பட்டது. அந்தப் பிரகடனத்துக்குப் பிறகான கால் நூற்றாண்டு காலம், அந்தப் பிரகடனத்தை நிலைநாட்டுவதற்காக அதனை முன்வைத்தவர்கள் களத்தில் போராடி விழும் வரையில் உழைத்தார்கள். ஆனால், இப்போது வவுனியா தீர்மானம் என்ற ஒன்றை அறிவித்தவர்கள், அடுத்த சில நாட்களிலேயே, அந்தத் தீர்மானத்திலுள்ள சரத்துக்களை மறந்தும் மாற்றியும் வந்திருக்கிறார்கள். அவை, அவசரக் குடுக்கைகளின் செயற்பாடுகளை ஞாபகப்படுத்தின. மக்களுக்காக அரசியலை முன்னெடுப்பவர்கள், மக்களின் மனங்களைப் புரிந்து கொண்டு, அவர்களைப் பிரதிபலித்து மேலேழ வேண்டும். மாறாக, மக்களின் மண்டைகளில் தீர்மானங்களைத் திணிக்கும் தரப்புக்களாக இருக்கக் கூடாது. அதனை, செய்யும் மற்றொரு தரப்பினராக அரசியல் பத்தியாளர்களும், அவர்கள் அடங்கிய தமிழ்த் தேசியப் பேரவையினரும் இருக்கக் கூடாது. இல்லையென்றால், அவர்களும் இன்னோர் தமிழ் முத்தோர் குழாமாக வரலாற்றில் பதியப்படுவார்கள்.

*Tamil uncle club என்பதை மூத்த தமிழ் ஆண்கள் குழாம் என்று அர்த்தம் கொள்க.

**புருஜோத்தமன் தங்கமயில்**

# தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து.



ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு தமிழ்த் தேசிய கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை யாழ். தந்தை செல்வா கலையரங்கில் திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் கைச்சாத்திடப்பட்டது.



தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தமிழ் மக்கள் பொதுச்சபையின் சார்பில் சிவில் - சமூக பிரதிநிதிகள் இதில் கைச்சாத்திட்டுள்ளனர். இதனடிப்படையில் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் இணைந்து தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பாக தொடர்ந்து இயங்குவதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு எனும் பெயரில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களும் பல்வேறு சிவில் அமைப்புக்களையும் இணைத்து உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பொதுச் சபையின் சார்பில் அதன் முக்கியஸ்தர்களும் கையொப்பம் வைத்திருந்தனர்.

இதில் 7 தமிழ்க் கட்சிகளும் 7 சிவில் சமூக பிரதிநிதிகளும் கையொப்பம் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் நல்ல தம்பி சிறிகாந்தா, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் சி.வேந்தன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதனை தவிர தமிழ் மக்கள் பொது சபை சார்பில் அரசியல் சமூக செயற்பாட்டாளரான த.வசந்தராஜா, அ.ஜோதிலிங்கம், பேராசிரியர் கே. ரீ.கணேசலிங்கம், இராசலிங்கம் விக்னேஸ்வரன், அரசியல் விமர்சகரான ஏ. ஜதீந்திரா மற்றும் அரசியல் விமர்சகரான ம. நிலாந்தன் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந் நிகழ்வில் பல்வேறு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் தேசத்தின் மக்களை ஒன்றுபடுத்துவது எனும் பிராதான நோக்குடன், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என தமிழ்த் தேசியக் கட்சிகளும், தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணக்கம் கண்டுள்ளன. அத்துடன், இதனை செயல்முனைப்புடன் கையாளும் நோக்கில் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இதன் பிரகாரம் இந்த உடன்படிக்கையின் சம தரப்புகள் எனும் வகையில், தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவை புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் கைச்சாத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்தின் புதிய பிரதமர் தீவிர வலதுசாரியா ? பாலஸ்தீன எதிர்ப்பும் - ஈழத்தமிழர்க்கு ஆதரவும் ?






இங்கிலாந்தின் தொழிற் கட்சியின் முன்னாள் தலைவராகவும், எதிர்க் கட்சி தலைவராகவும் இருந்த இடதுசாரிப் போக்காளரான ஜெர்மி கோர்பின் (Jeremy Corbyn) பாலஸ்தீன ஆதரவு கொள்கைகளை முன் வைத்து செயற்பாட்டு வந்தவர். அதன் விளைவாக தொழிற் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமை அறிந்ததே.

## ஜெர்மி கோர்பின் பாலஸ்தீன ஆதரவு:

ஜெர்மி கோர்பின், நடந்து முடிந்த ஜூலை 4 பொதுத் தேர்தலில் இஸ்லிங்டன் வடக்கு தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

ஆனாலும் இஸ்லிங்டன் வடக்கு தொகுதியில் தொழிற்கட்சி வெற்றி பெறவில்லை. அங்கு மூத்த இடதுசாரி மற்றும் தீவிர பாலஸ்தீனிய சார்பு செயற்பாட்டாளரான ஜெர்மி கோர்பின் சுயேச்சையாக வெற்றி பெற்றமை தொழிற்கட்சிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

காசாவில் தொடரும் இனப் படுகொலைக்கு எதிராக பிப்ரவரி 3, 2024 அன்று லண்டனில் நடந்த போராட்டத்தில் ஜெர்மி கோர்பின் பேசினார். அவ்வேளை தொழிற் கட்சியை "நேட்டோவின் கட்சி" (Party of NATO), எனவும் காரசாரமாக இஸ்ரேலின் பாலஸ்தீன நடவடிக்கைகளுக்கு எதிராக அவர் எதிர்ப்பைக் காட்டியுள்ளார்.

**தமிழர் தாயகத்தில் உயிரிழந்த, பாதிக்கப்பட்டவர்களுக்கும் , உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதியைப் பெறுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது, ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஒரு சர்வதேச நீதி பொறிமுறையை உருவாக்க வேண்டும் எனவும் கியர் ஸ்டார்மர் தெரிவித்திருந்தார்.**

## கியர் ஸ்டார்மரின் இஸ்ரேல் ஆதரவு:

காசாவில் பாலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு ஆதரவு அளித்ததன் காரணமாக மில்லியன் கணக்கான தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் கியர் ஸ்டார்மரின் கட்சிக்கு எதிராக திரும்பியதாகவும் கூறப்பட்டது.

ஜெர்மி கோர்பின் போர்நிறுத்தத்தை ஆதரிக்குமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அவர் வேண்டுகோள்களை விடுத்ததன் மூலம் போரை நிறுத்துக் கூட்டணியின் (Stop the War Coalition) மேடைகளில் கியர் ஸ்டார்மரின் தொழிற்கட்சியின் பெயரைக் குறிப்பிட்டு காரசாரமாக பல தடவை விமர்சித்துள்ளார்.

காஸாவில் பாரிய படுகொலைகள் மற்றும் இன அழிப்பு போருக்கு ஆதரவினை தொழிற் கட்சியின் தலைவர்கள் கொண்டிருப்பதால் ஜெர்மி கோர்பின் இப்போது தனித்து நின்று தொழிற்கட்சிக்கு எதிராக போட்டியிட்டுள்ளார்.

உண்மையிலே பாலஸ்தீன ஆதரவு காரணமாக தொழிற்கட்சியின் தலைவரான ஸ்டார்மர், ஜெர்மினை தேர்தலில் போட்டியிட வாய்ப்பை மறுத்ததுடன் கட்சியை விட்டும் நீக்கினார். கடந்த நான்காண்டு காலத்தில், தொழிலாளர் கட்சிக்குள் இருந்த இடது சாரிகளை ஒழித்துக் கட்டுவதில் முனைப்புடன் செயல்பட்டவர்தான் தற்போது பிரதமராக பொறுப்பேற்ற அக்கட்சியின் தலைவர் ஸ்டார்மர் ஆவார்.

ஜெர்மி கோர்பின் போன்றே, லேபர் கட்சியில் உள்ள மேலும் சில முற்போக்கு நபர்களுக்கும் போட்டியிட அனுமதி வழங்காமலும் கட்சியில் செயல்பட விடாமலும் லேபர் கட்சியின் திசையை மாற்றினார் ஸ்டார்மர்.

கட்சியின் காசா கொள்கைகள் மீது அவர்களின் உயர் பதவிகளை விட்டு பல தலைவர்கள் வெளியேறி உள்ளனர்.

## ஜெர்மி கோர்பின் மகத்தான வெற்றி!

இந்நிலையில், ஜெர்மி கோர்பின் இஸ்லிங்டன் வடக்கு தொகுதியில் சுயேட்சையாக போட்டியிட்டு லேபர் கட்சியின் மிகப்பெரும் இந்திய வம்சாவளி கோடீஸ்வரரான பிரபுல் நர்குண்டை (Praful Nargund) வீழ்த்தி மகத்தான வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது வெற்றி மிகப்பெரும் வெற்றியாக சர்வதேச அளவில் பாராட்டப்படுகிறது.

இங்கிலாந்து நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியை வீழ்த்தி கியர் ஸ்டார்மர் தலைமையிலான லேபர் கட்சி (தொழிலாளர் கட்சி) வெற்றி பெற்றுள்ளது. மொத்தமுள்ள 650 நாடாளுமன்ற தொகுதிகளில் 412 தொகுதிகளில் வென்று அதீத பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர்கிறது லேபர் கட்சி.

தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து பிரதமரும் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவருமான ரிஷி சுனக் ராஜினாமா செய்துள்ளார். ஸ்டார்மர் புதிய பிரதமராக பதவியேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் கட்சி எனப் பொருள்படும் லேபர் கட்சி, பெயரில் தொழிலாளர் கட்சி என்று இருந்தாலும், அது ஒரு முதலாளித்துவக் கட்சியே ஆகும்.

அதில், கோர்பின் போன்ற இடதுசாரி முற்போக்கு சிந்தனையாளர்கள் ஒரு தரப்பு இருந்தனர். அவர்களை அக்கட்சியில் உள்ள பெரும் பணக்கார அதிகார வர்க்க ஆதரவாளர்கள் ஒழித்துக் கட்டி வருகிறார்கள்.

## பாலஸ்தீன தனிநாடு எதிர்ப்பு :

கடந்த 20 ஆண்டுகளில் இது லேபர் கட்சிக்கு இத்தேர்தல் சிறந்த வெற்றியாக பார்க்கப்படுகிறது. எனினும் இங்கிலாந்தில் இக்கட்சி வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்த வாய்ப்புகள் இல்லை என்றே கூறப்படுகிறது.

குறிப்பாக, இஸ்ரேல் ஆதரவு, பாலஸ்தீனத்திற்கு அங்கீகாரம் மறுப்பது, போர் பொருளாதாரம், நேட்டோ ஆதரவு, இஸ்லாமிய வெறுப்பு, அதிதீவிர தனியார்மயமாக்கல், தொழிலாளர் விரோதப் போக்கு, புலம்பெயர்ந்தோர் வெறுப்பு என அனைத்திலும் இங்கிலாந்தின் கன்சர்வேடிவ் கட்சி, லேபர் கட்சி, தாராள ஜனநாயகவாதிகள் ஆகியோருக்கு இடையே பெரிய வேறுபாடுகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற போதிலும், தொழிற்கட்சி சில பாலஸ்தீனிய சார்பு வேட்பாளர்களுக்கு எதிராக கடுமையாக போராடியது என்பதும் உண்மையே.

## முஸ்லிம் வாக்குகளில் பின்னடைவு:

காசா மீதான போரில் அதன் நிலைப்பாட்டின் மீதான அதிருப்தியின் மத்தியில், பிரிட்டனின் தொழிலாளர் கட்சி அதிக முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதிகளில் குறிப்பிடத்தக்க தேர்தல் பின்னடைவைச் சந்தித்துள்ளது..

முஸ்லீம் மற்றும் பிற சிறுபான்மை குழுக்களின் ஆதரவை நீண்ட காலமாக நம்பி வந்த கட்சி, 10% க்கும் அதிகமான மக்கள் முஸ்லிம்களாக அடையாளம் காணும் இடங்களில் அதன் வாக்கு பாரியளவில் குறைந்துள்ளது.

காசாவில் சண்டை நிறுத்தப்பட வேண்டும் என்று தொழிற்கட்சி கூறினாலும், பிரிட்டனின் மக்கள்தொகையில் 6.5% ஆக இருக்கும் 3.9 மில்லியன் முஸ்லிம்கள் மக்களை சாந்தப்படுத்தி, மறுபுறம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான இஸ்ரேலின் உரிமையையும் அது ஆதரித்துள்ளது. அதேவேளை பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பது என இக்கட்சி கூறினாலும், அதற்கான திட்டவட்டமான அறிவிப்பை இதுவரை அறிவிக்கவில்லை.

## தொழிற்கட்சியின் தமிழ் ஆதரவு :

இலங்கையில் சுயநிர்ணயம், அமைதி மற்றும் நீதிக்காக தமிழ் மக்கள் செய்த தியாகங்களை நினைவுகூர வேண்டியது அவசியம் என தற்போதய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர் (Keir Starmer) கடந்த மே மாதம் தெரிவித்திருந்தார். பிரிட்டிஷ் தமிழர் பேரவை (BTF) ஏற்பாடு செய்திருந்த ட்ரஃபல்கர் சதுக்கத்தில் நடந்த நினைவேந்தல் நிகழ்வில் அப்போதய தொழிற்கட்சியுன் தலைவரும், தற்போதய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர் (Keir Starmer) இவ்வாறு தெரிவித்திருந்தார்.

தமிழர் தாயகத்தில் உயிரிழந்த பாதிக்கப்பட்டவர்களுக்கும், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதியைப் பெறுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஒரு சர்வதேச நீதி பொறிமுறையை உருவாக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் 2022 ஆம் ஆண்டில், தற்போதய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர் தமிழர்களுடன் ஆதரவாக நிற்கவும், அட்டூழியங்களைச் செய்த குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்ப ஐ.நா உயர் ஆணையரின் பரிந்துரைகளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்று இங்கிலாந்து அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தார்.

அனைத்து பாரிய அட்டூழியக் குற்றங்கள் மற்றும் பாரதூரமான மனித உரிமை மீறல்களின் குற்றவாளிகள் பொறுப்புக்கூறப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்" என்றும் அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தார்.

உண்மையான அமைதி மற்றும் நீதிக்கான தமிழ் மக்களுக்காக தொழிற் கட்சி எப்போதும் துணை நிற்கும் என்றும் அவர் 2022 இல் கூறியிருந்தார்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை!

ஈழத்தமிழ் மக்கள் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கில் தமக்கென ஒரு மரபு வழித் தாயகத்தைக் கொண்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வடக்கு கிழக்கு உள்ளடங்கலாக இலங்கைத் தீவில் வாழும் தேசிய இனம் என்ற அடிப்படையில், சுயநிர்ணய உரிமையைக் கொண்டவர்கள். அதனடிப்படையிலும் பன்னாட்டுச் சட்டங்களின் அடிப்படையிலும் உச்சபட்ச தன்னாட்சியைக் கோருவதற்கான உரித்துடையவர்கள்.

நீண்ட வரலாற்றையும் மிகச் செழிப்பான பண்பாட்டையும் கொண்ட தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை சிதைக்கும் நோக்கத்துடன், நிலப்பரப்பு ரீதியாகவும். பண்பாட்டு ரீதியாகவும். மதரீதியாகவும் என பல்வேறு வழிகளில் இலங்கைத்தீவில் இன வழிப்பு நடவடிக்கைகள் சிறீலங்கா அரசினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் நியாயமான உரிமைப் போராட்டம் தீவிரவாதமாகவும் பிரிவினைவாதமாகவும் பயங்கரவாதமாகவும் சித்தரிக்கப்பட்டுவருகின்றது.

ஈழத்தமிழர்கள் இலங்கைத் தீவில் ஒரு தேசிய இனமாக இருப்பதும், கேந்திர முக்கியத்துவம் மிக்க புவிசார் அமைவிடத்தை வாழ்விடமாகக் கொண்டிருப்பதும் அவர்களது பிரதான அரசியல் பலமாகும் என்னும் யதார்த்தத்தின் பின்னணியில்தான் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் முதலில் பிராந்தியமயப்பட்டது பின்னர் அனைத்துலகமயப்பட்டது.

நடந்து முடிந்த உள்நாட்டுப் போரில் இனப்படுகொலை செய்யப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களின் விவகாரத்தில் பன்னாட்டுச் சமூகம் காட்டி வந்திருக்கின்றன்ற கரிசனைகளைச் சிறீலங்கா அரசு எந்தவிதத்திலும் பொருட்படுத்தவும் இல்லை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவுமில்லை. அதே நேரத்தில். முள்ளிவாய்க்காலின் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டுகளில், இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் முகமாக தமிழ் மக்களிற்கு சமஉரிமையை வழங்கும் அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு நகர்வுகளைக்கூட இதுவரை காலமும் முன்னெடுக்கவில்லை.

இனப்படுகொலைக்கு எதிரான நீதியுமின்றி, அரசியல் தீர்வுமின்றி. ஒன்றுபட்ட அரசியல் தலைமைத்துவமும் இன்றி பாரபட்சங்களும், அடக்குமுறைகளும், அச்சுறுத்தல்களும், ஆக்கிரமிப்புக்களும், அழிப்புகளும், பிரித்தாளும் தந்திரங்களும் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு அரசியல், பொருளாதார. இராணுவச் சூழலில் தமிழ் மக்களின் தேசிய இருப்பு கேள்விக்குள்ளாகி நிற்கின்றது.

இவ்வாறான வரலாற்று உண்மைகளின் அடிப்படையிலும், இதுகாலவரையிலான அனுபவங்களின் அடிப்படையிலும், சிறீலங்காவின் 2024 அரசுத்தலைவர் தேர்தலைத் தமிழ் மக்கள் தரப்பில் செயல்முனைப்புடன் எதிர்கொள்ளவேண்டிய அரசி அரசியல் தேவையும் அவசியமும் எழுந்திருக்கின்றது. இந்த யதார்த்தத்தின் பின்னணியில், தமிழ்த் தேசத்தின் மக்களை ஒன்றுபடுத்துவது என்னும் பிரதான நோக்கத்தோடு, எதிர்வரும் சிறீலங்காவின் அரசுத்தலைவர் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்று. தமிழ் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபையும் இணக்கம் கண்டுள்ளன. அத்துடன், இதனைச் செயல்முனைப்புடன் கையாளும் நோக்கில், பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வதென்றும் முடிவைக் கொண்டுள்ளன.

இதன்பிரகாரம் இவ்வுடன்படிக்கையின் சமதரப்புக்கள் என்னும் வகையில். தமிழ்த் தேசிய கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகியவை பின்வரும் அடிப்படையில் புரிந்துணர்வு ஒன்றினை ஏற்படுத்திக்கொள்கின்றன.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவை இவ்வு டன்படிக்கையில் சம தரப்பினர் என்னும் வகையில், இரு தரப்பினரின் இணைவில் உருவாக்கப்படும் இக்கட்டமைப்பு "தமிழ்த் பொதுக்கட்டமைப்பு" என அழைக்கப்படும்.

2. இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்படும் "தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு" எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை. சிறிலங்காவின் அரசுத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் தேர்தலாக கையாளும் வகையில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

3. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது தமிழ்ப் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தல், தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல், நிதி தொடர்பான விடயங்கள், பரப்புரைகளை முன்னெடுத்தல் போன்ற, அனைத்து அவசியமான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கும் நிர்வகிப்பதற்குமான துணைக் குழுக்களை தேவைக்கேற்ப உருவாக்கும் அதிகாரங்களை கொண்டிருக்கும்.

4. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பால் பொதுவேட்பாளரை நிறுத்தும் நடவடிக்கைக்காக உருவாக்கப்படும் குறித்த துணைக் குழுக்கள் மற்றும் ஏனைய துணைக் கட்டமைப்புக்கள் அனைத்திலும் தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவை சமதரப்பாகப் பங்குபற்றும்.

5. தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுபவரும் அவருக்கான தேர்தல் சின்னமும் தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான ஒரு குறியீடாக மட்டுமே கருதப்படுதல் வேண்டும்.

6. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது பொது வேட்பாளராகத் தெரிந்தெடுக்கப்படுபவருடனும், அவர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் சார்பில் உத்தியோகபூர்வமாக நிறுத்தப்படுகின்றாரோ அந்த நபருடனும் அந்தக் கட்சியுடனும் அவசியமானதும் உகந்ததுமான உடன்படிக்கையைத் தனித்தனியே நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

7. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள். தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகிய இரு தரப்பும், ஒரு பொதுக் கட்டமைப்பாக செயற்படுபவர்கள் என்னும் அடிப்படையில் கூட்டுப் பொறுப்புடையவர்கள் என்பதில் இணக்கம் காணப்படுவதுடன், இதற்கான வழிகாட்டல் நெறிமுறை ஒன்றை உருவாக்கிக் கொள்வது என்றும் இணக்கம் காணப்படுகின்றது.

8. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உடன்பாடுள்ள ஏனைய கட்சிகள் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு, பொதுக் கட்டமைப்புடன் இணைந்து பயணிக்க முன்வரும்போது. அவர்களை உள்வாங்கிக் கொள்வதென்றும் இணக்கம் காணப்படுகின்றது.

9. தமிழ்த் தேசிய இனத்தின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் குறிக்கோளுடன் தொடர்ந்து செயற்படுவதென இருதரப்பும் மேலும் இணங்கிக் கொள்கின்றனர்.

## தேர்தல் வாக்குறுதிகள் தொடர்பில் புதிய சட்டம் இயற்றப்படவேண்டும்!

### மன்னாரில் கையெழுத்துப் போராட்டம்!



தேர்தல் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். எனக்கோரும் கையெழுத்துப் பெறும் வேலைத்திட்டம் கடந்த வாரம் மன்னாரில் நடைபெற்றது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக மக்களிடம் குறித்த கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

தேர்தல் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் வழக்கமாக நிறைவேற்றப்படுவதில்லை. அவ்வாறான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் இயற்றப் படவேண்டும். இவ்வாறு பொய் வாக்குறுதிகள் வழங்கப் படுகின்றமையால் பொதுமக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என தெரிவித்துள்ள மீனவர் அமைப்பு அனைத்து மாவட்டங்களிலும் யைழுத்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்தது. இந்நிலையில், முன்னெடுக்கப்படும் இந்தக்கையெழுத்துப் போராட்டம் மன்னாரில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கட்சியை இளையோரிடம் கையளித்து விடுவேன்

### நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு.



எமது கட்சி இளையோரின் கட்சி ஒரு ஆரோக்கியமான குழந்தையை பெறுவதற்கு ஒரு செவிலித் தாய் எவ்வாறு பார்த்து கொள்வாரோ அதே போல் இந்த கட்சியை நல்லதொரு கட்சியாக உருவாக்கி இளையோரிடம் கையளிக்கவுள்ளேன். என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியான தமிழ் மக்கள் கூட் டணி இதுவரை பல கஷ்டங்களை எதிர்கொண்டு தற்போது நல்லதொரு நிலைக்கு வந்துள்ளது. எமது கட்சியை பதிவு செய்ய விடக்கூடாது என்று கூட பலர் பல விதமான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அது கூட எமக்கு சில காலங்களுக்கு முன்னரே தெரியவந்துள்ளது.

எமது கட்சி இன்று பதிவு செய்யப்பட்ட, பல இளைஞர்களை தன்னகத்தே கொண்ட கட்சியாக இருக்கின்றது.


நாங்கள் இதுவரையில் என்ன செய்தோம் என கேட்கக்கூடும். பல நாடுகளின் உயர்ஸ்தானிகர், தூதுவர்கள் என பல்வேறு பட்ட தரப்பினர்களுடன் எமது பிரச்சினைகள் தொடர்பில் பேசி இருக்கிறோம். எமது கருத்துக்களை அவர்கள் உன்னிப்பாக செவிமடுத்து சிலதை செய்துள்ளார்கள். இன்று உலக நாடுகள் மத்தியில் இலங்கைக்கான ஆதரவு குறைந்துள்ளது. பல நாடுகள் இலங்கைக்கான தமது ஆதரவு நிலைப்பாட்டில் இருந்து விலகியுள்ளன. தமிழர்களின் நிலங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு தொடர்பில் பல தரப்பிடமும் எடுத்து கூறி வெளிக்கொணர்ந்துள்ளோம்.

அதுமட்டுமின்றி தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து சிங்கள மக்கள் மத்தியிலும் எடுத்துக் கூறியுள்ளோம். இன்னமும் கூறி வருகிறோம்.

அதேவேளை எமது மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தி வருகிறோம். அதற்கான உதவிகளையும் செய்து வருகின்றோம் எமது கட்சி இளையோரின் கட்சியாகும்.

அப்போது நீங்கள் ஏன் தலைவராக இருக்கிறீர்கள் என கேட்கலாம். குழந்தையை தாயொருவர் பிரசவிப்பதற்கு முன்னர் அந்த குழந்தை ஆரோக்கியமான குழந்தையாக பிறக்க வேண்டும் என்பதற்காக செவிலித் தாயொருவர் கூட இருந்து அந்த தாயை கவனமாக பார்த்துக்கொள்வார்.

அதே போலவே இந்தக் கட்சியை நல்ல நிலையில் வளர்த்து, இளையோரிடம் கையளித்து விட்டு, சம்பந்தன் போல போய் சேர்ந்து விடுவேன் என தெரிவித்தார்.



– நவீனன் –

# கறுப்பு ஜூலையும் இனவாதக் கோட்பாடும்!

கறுப்பு ஜூலை "இனக்கலவரம்" என்ற போர்வைக்குள் நடைபெற்றதே தமிழர் மீதான "இனப்படுகொலை" நிகழ்வாகும். ஆனால் கறுப்பு யூலை படுகொலைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட முறையும் அளவும் அதற்கு அரச தரப்பில் இருந்த ஆதரவும் அதனை வெறும் இன வன்முறையாகக் கருத முடியாது.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை செயற்பாடாகவே ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

நாற்பத்தொரு ஆண்டுகளை கடக்கும் கறுப்பு ஜூலையும், வெலிக்கடை சிறைப் படுகொலையின் சூத்திரதாரிகள் இதுவரை நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்த பாரிய இனப்படுகொலையான "கறுப்பு ஜூலை"யின் கோர நிகழ்வுகள் தமிழரின் வரலாறுகளிலும், மனங்களிலும் ஒருபோதும் நீங்காத வடுக்களை பதித்துள்ளது.

சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில் இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர் செய்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எந்த ஒரு அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும். நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு ஜூலைப் படுகொலை ஓர் இனத்திற்கு எதிரான அழிப்பு நடவடிக்கையாகவே தமிழ் மக்களால் கருதப்படுகிறது.

தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்த இனப்படுகொலை நீதி மறுக்கப்பட்டு, சர்வதேசத்தால் மறக்கப்பட்டாலும் அதிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை போராடும் இனங்கள் தெளிவாக கற்று அறிய வேண்டும்.

**1983, ஜூலை 23:**

1983, ஜூலை 24, 25 காலப் பகுதியில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சிங்கள படைத்துறையால் 100 பேர் வரையான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுடன் ஆரம்பமாகி, வெலிக்கடை சிறைப்படுகொலை, பின்னர் தென்னிலங்கை இனப் படுகொலையாக தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன.

> **தமிழினத்தை தன்னிலைபற்றிச் சிந்தித்து, தனக்கென ஒரு நாடு தேவை என்ற தீர்வைக் கொடுத்தது என்னவோ, சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரது ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட தரப்படுத்தல் என்ற தமிழ் மாணவரது கல்வியை நசுக்கும் செயல்தான் என்பதை எவராலுமே மறுக்கமுடியாது.**

1983 கறுப்பு யூலையில் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படுகொலை செய்தமை மானுட வரலாற்றில் துன்பவியல் நிகழ்வாகும்.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட படுகொலை செயற்பாடாகவே நம்பப்படுகிறது. கறுப்பு யூலை நிகழ்வுகளே இலங்கை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப்படுகின்றது.

**இனப்படுகொலை திட்டமிடப்பட்டதா ?**

மூன்று தசாப்தகாலமாக நடைபெற்ற தமிழ் மக்களின் அகிம்சை போராட்டம் தோற்றுப் போக தமிழ் இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கு தேவையான வலிமையை கறுப்பு ஜூலை வலிகளில் இருந்தே ஈழத்து தமிழ் மக்கள் பெற்றார்கள் என்பதும் உண்மையே.

ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபடி கொழும்பிலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு கட்டவிழ்த்து விட்டது. உண்மையில் இக்கோர கறுப்பு யூலை நிகழ்வுகளே ஈழத்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராட தூண்டியது என்றும் கூறலாம்.

ஈழத் தமிழினம் டீ.எஸ். சேனநாயக்கா போன்ற சிங்களப் பேரினவாதத் தலைவர்களால் காலத்துக்குக் காலம் பொருளாதாரரீதியாகவும், நில உரிமை ரீதியாகவும், மொழி ரீதியாகவும் நயவஞ்சகமாகவும் நேரடியாகவும் நசுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அவற்றுக்கெதிராக அவ்வப்போது சில அரசியல் தலைவர்களது குரல் ஒலிப்பதும், சில அற்ப சொற்ப சலுகைகளுக்காக அடங்கிப்போவதும் நாம் கண்ட வரலாறாகும்.

**தரப்படுத்தலும் மாணவர் எழுச்சியும்:**

தமிழினத்தை தன்னிலைபற்றிச் சிந்தித்து, தனக்கென ஒரு நாடு தேவை என்ற தீர்வைக் கொடுத்தது என்னவோ, சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரது ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட 'தரப்படுத்தல்' என்ற தமிழ் மாணவரது கல்வியை நசுக்கும் செயல்தான் என்பதை எவராலுமே மறுக்க முடியாது.

தரப்படுத்தல் சிவகுமாரன் போன்ற மாணவர்களை அகிம்சை வழியிலிருந்து விலகி ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியது. அரச பயங்கரவாதச் சுரண்டல்களுக்குப் பரிகாரம் ஆயுதப் போராட்டமே என்ற எண்ணம் பல இளைஞருள்ளும் அக்காலத்தில் எழுந்தது.

அரச படை இயந்திரங்களை எதிர்த்துப் போரிட முடியுமா என்ற கேள்வியே ஈழத் தமிழினத்தால், குறிப்பாக தமிழின அரசியல் மேடைப்பேச்சுத் தலைவர்களால் நினைத்துப் பாராததொன்றாக இருந்தது. ஈழத்தமிழனின் கல்வியில் திணிக்கப்பட்ட தரப்படுத்தலானது இளைஞர்களை ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியதும் வரலாற்று உண்மையாகும்.

திருநெல்வேலி தாக்குதலும் அதைத் தொடர்ந்து எழுந்த அரச பயங்கரவாத ஆதரவுடன் இடம்பெற்ற இனக்கலவரமும் ஈழப் போராட்ட அமைப்புகளின் பாரிய வளர்ச்சிக்கு வழி வகுத்தது.

**வெலிக்கடை சிறைப் படுகொலை :**

ஜூலை 1983 இல் இலங்கையில் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்ற கறுப்பு ஜூலை வன்முறை நிகழ்வுகளின் போது இடம்பெற்ற உச்சக்கட்ட நிகழ்வே வெலிக்கடை சிறைப் படுகொலையாகும்.

இதன் போது மொத்தம் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பின் அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் சக சிங்களக் கைதிகளால் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் எவரும் இன்று வரையில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படவில்லை.

வெலிக்கடை சிறைப் படுகொலை இரண்டாம் தடவையாக ஜூலை 28ம் திகதி மீண்டும் இடம்பெற்றது. இதில் 18 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிறைச்சாலை அதிகாரிகளே அறைக் கதவுகளின் திறப்புகளை சிங்களக் கைதிகளுக்கு கொடுத்ததாக தெரிவித்தனர். ஆனால் சிறை அதிகாரிகளின் கூற்றுப்படி, சிங்களக் கைதிகள் தம்மிடம் இருந்து திறப்புகளைக் களவெடுத்ததாகத் தெரிவித்தனர்.

இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிங்கள இனவெறியர் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலையின் முன் கொல்லப்பட்ட குட்டிமணியின் உடலை நிர்வாணமாக்கிப் போட்டார்கள். இவ்வாறாக ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டு ஆணுறுப்பு வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது.

காட்டுமிராண்டித் தனமான கூச்சல்களுக்கு மத்தியில் ஏனைய தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு புத்தரின் காலடியில் எறியப்பட்டனர்.

சிங்கள இன வெறியர்கள், தமிழிளைஞர்களின் தலைகள், கண்கள், கால்கள், கைகள், உடல்கள், செங்குருதி யாவற்றையும் புத்தருக்கு காணிக்கையாக அளித்தனர். இப்படுகொலைகள் நடைபெற்ற தினத்திற்கு முதல் நாள் புத்தர்களின் புனிதநாளான போயா தினமாகும். போயா தினத்தில் உபவாசம் இருந்து "சில்"" அனுஷ்டித்தவர்கள் மறுநாள் இப்படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்தனர் என இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வாய்ப்புக்களைத் தேடி நீங்கள் பயணியுங்கள்

## நிச்சயமாக உங்களுடைய திறமைக்கு ஏதோ ஒரு வகையில் வாய்ப்பு கிடைக்கும்

செய்தி வாசிப்பாளர், நிகழ்ச்சி தொகுப்பாளர், நடிகை, பாடகி

## சரத்குமார் லக்சனா

சிறுவயதில் ஊடகத்துறையிலும் சரி சினிமா துறையிலும் சரி சாதிக்க வேண்டும் என்ற இலக்கோடு பயணிக்கும் ஒருவர் பற்றி தான் இன்றைய நேர்காணலில் நாம் பார்க்கப் போகின்றோம். தன்னுடைய 18 வது வயதிலேயே ஊடகப் பயணத்தில் அடி எடுத்து வைத்தவர் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியில் வசித்து வரும் சரத்குமார் லக்சனா. இவர் ஊடகத்துறையும் கடந்து தற்போது சினிமா துறையிலும் தடம் பதித்திருக்கின்றார்.

**வணக்கம் லக்சனா உங்களுடைய ஊடகப் பயணம் தொடர்பாகக் குறிப்பிடுங்கள்?**

எனக்கு 18 வயது இருக்கும் போது ஊடகத்துறைக்குள் பிரவேசிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. சிறு வயது முதலே நான் தொலைக்காட்சியில் வரவேண்டும் என்கின்ற ஆசை இருந்தது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்கின்ற போதெல்லாம் இவ்வா



றான நிகழ்ச்சிகளை போல நானும் ஒரு நிகழ்ச்சியை தொகுத்து வழங்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் ஏற்பட்டது. இத்தகைய தூண்டுதலே நான் ஊடகத் துறைக்குள் பிரவேசிக்க காரணமாய் அமைந்திருந்தது. அதனால் என்னுடைய 18 வயதில் யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கின்ற கேப்பிட்டல் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது.

**வாழ்த்துக்கள் லக்சனா இவ்வளவு சிறுவயதில் உங்களுக்கான வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி. இருந்தாலும் இதனை எல்லாம் எப்படி சமாளித்து கொண்டீர்கள்?**

எனக்குள் இருக்கும் தன்னம்பிக்கை என்னை இன்னும் உயரத்துக்கு கொண்டு போய் சேர்த்தது என்று சொல்லலாம். ஆரம்பத்தில் சற்று பயத்துடன் தான் ஊடகத்துறைக்குள் பிரவேசித்தேன். எதுவுமே தெரியாத வயதில் எப்படி இந்த ஊடகத்துறைக்குள் நின்று நிலைப்பேன் என்று கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. ஆனாலும் என்னுடைய விடாமுயற்சி தன்னம்பிக்கை மட்டுமே என்னை இந்த அளவுக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது.

**ஊடகப் பயணத்தில் உங்களுக்கான வாய்ப்புகள் எவ்வாறு அமைந்திருந்தது?**

ஆரம்பத்தில் நான் தொலைக்காட்சியினுடைய செய்தி வாசிப்பாளராக தான் பணியாற்றுவதற்கு முதலில் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் பிற்பாடு சிறிது சிறிதாக என்னுடைய வளர்ச்சியினை கண்டு நிகழ்ச்சி தொகுப்பாளராக பணியாற்றுவதற்கான வாய்ப்பையும் அந்த தொலைக்காட்சி நிறுவனம் பெற்று தந்தது. பிரதான செய்திகளை நான் வாசிக்க தொடங்கினேன். அதற்குப் பின்னர் காலை நேர வணக்கம் கேப்பிட்டல் நிகழ்ச்சியினையும் தொகுத்து வழங்குவதற்கு வாய்ப்பு கிடைத்தது அத்துடன் ட்ரெண்டிங் என்கின்ற நிகழ்ச்சியும் தொகுத்து வழங்க வாய்ப்பு கிடைத்தது.

**உங்களுக்குள் இருக்கும் இசைத் திறமைகள் பற்றி குறிப்பிடுங்கள்?**

சிறு வயது முதல் இசைத்துறை மீது எனக்கு அதிக ஆர்வம் இருந்தது. நான் நன்றாக பாடல் பாடுவேன். பாடசாலை காலங்களில் அதிகமாக மேடைகளில் ஏறி பாடல் பாடிய

> ஆரம்பத்தில் சற்று பயத்துடன் தான் ஊடகத்துறைக்குள் பிரவேசித்தேன். எதுவுமே தெரியாத வயதில் எப்படி இந்த ஊடகத்துறைக்குள் நின்று நிலைப்பேன் என்று கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது . ஆனாலும் என்னுடைய விடாமுயற்சி தன்னம்பிக்கை மட்டுமே என்னை இந்த அளவுக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது.

நினைவுகளும் உண்டு. அதுமட்டுமல்ல கொரோனா காலத்தில் கூட கேப்பிட்டல் தொலைக்காட்சியில் கொரோனா பாடல் பாடுவதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது.



மேலும் தீபாவளி தின பாடலும் பாடியிருக்கிறேன். அதில் நடிப்பதற்கான வாய்ப்பும் எனக்கு கிடைத்தது.

**உங்களுக்கான சினிமாத்துறை வாய்ப்பு எப்படி கிடைத்தது?**

டிஆர்எம் பிக்சர்ஸ் தயாரித்த புங்குதீவே என்கின்ற பாடலில் நடிப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இந்த வாய்ப்பை எனக்கு பெற்று தந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் பிரபல புகைப்பட கலைஞர்களாக விளங்கும் ஏ கே கமல் என்கின்ற புகைப்பட கலையகம் தான் இந்த வாய்ப்பை எனக்கு பெற்றுத் தந்தது. அத்துடன் அறிமுக நடிகையாக நான் இந்தப் பாடலில் நடித்திருப்பதும் மிக முக்கியமாக கூற வேண்டும். எனவே இது என்னுடைய வாழ்க்கையில் நடிப்பிற்கான ஒரு முதல் அத்தியாயமாகவே கருதப்படுகிறது.

**ஊடகத்துறை சார்ந்து இப்போது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?**

இப்போது நான் யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கின்ற பிரபல தொலைக்காட்சி நிறுவனமான ஐ பி சி தமிழ் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். அத்துடன் பகுதி நேரமாக நான் வானவில் என்கின்ற நேர்காணல் நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கின்றேன். மேலமாக ஃபுட் ரிவியூ என்கின்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கிறேன்.

**இத்தருணத்தில் நீங்கள் நன்றி கூற விரும்பும் நபர்கள்?**

முதலில் என்னுடைய குடும்பத்தினருக்கு நன்றி கூற வேண்டும். அவர்கள் தான் என்னுடைய ஒவ்வொரு நகர்விலும் பக்க பலமாக இருக்கிறார்கள். அத்துடன் என்னுடைய அன்பு கணவர் சரத்குமார் அவருக்கும் நன்றி சொல்ல வேண்டும். அவர் என்னுடைய வாழ்க்கையில் எல்லா விடயங்களுக்கும் உறுதுணையாக இருக்கிறார். என்னுடைய மாமியாரும் எனக்கு ஒரு தாய் போன்று சிறந்த வழிகாட்டியாக இருந்து வருகிறார். மேலும் என்னுடைய ஊடகத்துறை நண்பர்கள் எனக்கு நடிப்பதற்கான வாய்ப்புகளை அளித்த அனைவருக்கும் இந்த வேளை நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

**உங்களைப் போன்று ஊடகத்துறையிலும் சரி சினிமாத் துறையிலும் சரி சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு கூற விரும்புவது?**

எல்லோருக்கும் ஏதோ ஒரு கனவு இருந்து கொண்டு தான் இருக்கும். அந்த கனவு எந்த துறை சார்ந்திருந்தாலும் உங்களுடைய கனவுகளைத் தேடி பயணியுங்கள் என்று நான் கூற விரும்புகின்றேன். காரணம் நானும் அப்படித்தான் பல்வேறு இடங்களை கடந்து தான் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கின்றேன். அதுபோல நீங்களும் எந்த தடைகள் வந்தாலும் தடைகளை தகர்த்தெறிந்து உங்களுடைய பாதையில் பயணத்தை தொடர்ந்தால் வெற்றி மகுடம் சூட்டிக் கொள்ளலாம் என்பதுதான் என்னுடைய நம்பிக்கையும் மற்றும் என்னுடைய ஒரு அறிவுரையாகவும் இருக்கிறது. வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்று கவலைப்படாமல் வாய்ப்புகளைத் தேடி நீங்கள் பயணியுங்கள் நிச்சயமாக உங்களுடைய திறமைக்கு ஏதோ ஒரு வகையில் வாய்ப்பு கிடைக்கும் என்பது நம்பிக்கை.

– ஸ்ரீதரன் தமிழினி –









# அர்ஜுனாவும் இரும்பு மோதிரமும்



– நிலாந்தன் –

ஒரு கனேடிய நண்பர்,அவர் ஒரு பொறியியலாளர், இரும்பு மோதிரம் ஒன்றை அணிந்திருந்தார். அதற்குப் பின்னால் உள்ள கதையைச் சொன்னார். கனடாவில், கியூபெக் பாலம் 1907ஆம் ஆண்டு மனிதத் தவறுகளால் நொறுங்கி விழுந்தது. அதில் 75 தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள். அப்படி ஒரு தவறு இனிமேலும் நடக்க கூடாது என்ற சங்கல்பத்தோடு பொறியியலாளர்களுக்கான சத்தியப்பிரமாணம் ஒன்றைக் குறித்துச் சிந்திக்கப்பட்டது. டொரன்டோ பல்கலைக் கழகத்தின் பேராசிரியரான பொறியியலாளர் Haultain ஹோல்டேய்ன் 1922ஆம் ஆண்டு பொறியியலாளர்களுக்கான தொழில்சார் சத்தியப்பிரமாணத்தை அறிமுகப்படுத்தினார். 1925ஆம் ஆண்டு அவருடைய மேற்பார்வையின் கீழ் பொறியியல் பட்டதாரிகள் இரு ம்பு மோதிரம் அணிந்து சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்கள். முதலாவது தொகுதி இரும்பு மோதிரங்கள் உடைந்து விழுந்த கியூபெக் பாலத்தின் இரும்புத் தூண்களில் இருந்து தயாரிக்கப்பட்டன.

> **துறைசார் அரச உயர் அதிகாரிகள் அவர் எழுப்பிய கேள்விகள் தொடர்பாக மக்களுக்கு பதில்கூற வேண்டும். அதைவிட முக்கியமாக அர்ஜுனா ஒரு பொறியைத் தட்டிப்போட்டதும் அது எப்படி சாவகச்சேரியில் தீயாகப் பரவியது என்பதற்குரிய சமூக உளவியலையும் தொகுத்து ஆய்வுசெய்ய வேண்டும். அர்ஜுனாவின் கலகம் வெற்றிடத்தில் இருந்து தோன்றவில்லை. அது ஏற்கனவே சமூக மட்டத்தில் பரவலாகக் காணப்பட்ட அதிருப்தி,கோபம்,பயம், சந்தேகம் போன்றவற்றின் தொகுக்கப்பட்ட விளைவுதான். ஏற்கனவே பொதுப் புத்திக்குள் இருந்த பயங்களையும் கோபத்தையும் அதிருப்தியையும் அர்ஜுனா ஒருங்குவித்தார் என்பதுதான் சரி.**

இது கனேடியப் பொறியியலாளர்களுக்கான பொறுப்புக்கூறல் சம்பந்தப்பட்ட ஒரு விடயம். மருத்துவர்களுக்கும் அவ்வாறு உலகளாவிய "ஹிப்போகிரடிஸ் ஓத்" என்று அழைக்கப்படும் சத்தியப்பிரமாணம் உண்டு.

பொறுப்புக்கூறல் எனப்படுவது மருத்துவத் துறைக்கும் பொறியியல் துறைக்கும் மட்டுமல்ல எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும். ஒரு சமூகப் பிராணியாக இருக்கும் மனிதர்கள் அனைவருக்கும் அது பொருந்தும். மருத்துவர் தவறுவிட்டால் உயிர் போகும் உறுப்புகள் போகும். பொறியியலாளர் தவறு விட்டால் பாலம் இடிந்து விழும்அல்லது கட்டடம் இடிந்து விழும்உயிர் போகும் உறுப்புகள் போகும்சொத்துக்கள் போகும். ஆசிரியர் தவறுவிட்டால் ஒரு தலைமுறையின் எதிர்காலம் நாசமாகும். தலைவர்கள் தவறு விட்டால் ஒரு நாடு அழிந்து போகும். எனவே மனிதத் தவறுகளுக்கு மனிதர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

சமூகத்தின் மிகச்சிறிய அலகாகிய குடும்பத்துக்குள் குடும்ப அங்கத்தவர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். நிறுவனங்களுக்குள் கட்டமைப்பு சார்ந்து, தொழில் தர்மம் சார்ந்து, பதவிவழி சார்ந்து,பொறுப்புக்கூற வேண்டும். தலைவர்கள் மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும். ஆகக் குறைந்தது எல்லா மனிதர்களும் தங்களுடைய மனச் சாட்சிக்காவது பொறுப்புக் கூற வேண்டும்.

மருத்துவர் அர்ஜுனா மருத்துவத்துறை சார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பை அதிகப்படுத்தியுள்ளார். மருத்துவத்துறை சார்ந்தவர்கள் சமூகத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய நிர்ப்பந்தங்களை அவர் அதிகப்படுத்தியுள்ளார். அவர் எப்பொழுதும் நேரலையில் தோன்றினார். அப்பாவித்தனமாகவும் வெகுளித்தனமாகவும் தனக்குச் சரியெனப்பட்டதை நேரலையில் கூறினார். அவரிடம் உள்ள அப்பாவித்தனமும் தன்னைத் தற்காத்துக் கொள்ளாத துணிச்சலும் கலகக் குணமும் அவரை மக்களுக்கு நெருக்கமானவர் ஆக்கின. அதேசமயம் அந்த அப்பாவித்தனமும் அவசரமும் நிதானமின்மையும் பக்குவமின்மையும் ஊடகங்கள் முன் அவரை சிலசமயம் பலவீனமானவராகவும் காட்டின.

சுகாதாரத்துறை தொடர்பாக அவர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை வெவ்வேறு ஊடகவியலாளர்கள் ஏற்கனவே முன்வைத்திருக்கிறார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த மு.தமிழ்ச்செல்வன் அதுதொடர்பாக கட்டுரைகள் எழுதியிருந்தார். ஆனால் அர்ஜுனா இதில் எங்கே வேறுபடுகிறார் என்றால்,அவர் அந்த சிஸ்டத்துக்குள் இருந்துகொண்டே அந்த சிஸ்டத்தைக் கேள்வி கேட்கின்றார் என்பதுதான். அதுதான் அவருக்கு கிடைத்த கவர்ச்சி.

அந்தக் கவர்ச்சியை அவர் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வாரா இல்லையா அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை எத்தகையது அவருடைய தனிப்பட்ட சுபாவம் எத்தகையது.. போன்ற எல்லா விடயங்களுக்கும் அப்பால், அவர் எழுப்பியிருக்கும் கேள்விகளுக்கு துறைசார் உயர் அதிகாரிகள் பதில் கூறுவதே பொருத்தமானது. ஏனெனில் அர்ஜுனா மருத்துவத்துறை சார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பை ஏற்படுத்தியிருக்கிறார். மருத்துவத்துறைக்கு அது தொடர்பில் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார்.

தமிழ்ச் சமூகத்தில் கிராமவாசிகள் அரச மருத்துவமனைகளை தர்மாஸ்பத்திரிகள் என்று அழைப்பார்கள். அங்கு மருந்தும் சிகிச்சையும் இலவசமாக தரப்படுகிறது என்று பொருள். ஆனால் அவை மெய்யான பொருளில் தர்மாஸ்பத்திரிகள் அல்ல.அங்கே வேலை செய்யும் மருத்துவர்கள் உட்பட அனைவரும் சம்பளம் வாங்குகிறார்கள். அந்தச் சம்பளம் மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் இருந்து திரட்டப்படுவது. அங்கு வழங்கப்படும் இலவச மருந்தும் சிகிச்சையும் கூட மக்களுடைய வரிப் பணம்தான். எனவே அங்கே யாரும் யாருக்கும் தானம் செய்யவில்லை.யாரும் யாரிடமும் தானம் பெறவும் இல்லை.

ஆனால் வாங்கும் சம்பளத்துக்கு மேலதிகமாக தமது தொழிலைத் தொண்டாகச் செய்யும் மருத்துவர்கள் அநேகர் உண்டு.தாம் பொறுப்பேற்ற நோயாளியை காப்பாற்றுவதற்காக ஊண் உறக்கமின்றி சேவை புரியும் மருத்துவர்கள் உண்டு. தனியார் மருத்துவமனைக்குப் போகக்கூடாது என்பதனை ஒரு தவம் போல கடைப்பிடிக்கும் மருத்துவர்கள் உண்டு. தனியார் மருத்துவத் துறைக்கு போனாலும் அங்கே நோயாளியின் நிதிநிலையைக் கருத்தில் எடுத்து காசு வாங்காத மருத்துவர்கள் உண்டு.வாங்கிய காசை உண்டியலில் சேகரித்து தானம் செய்யும் மருத்துவர்கள் உண்டு.எனவே அர்ஜுனா முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் மருத்துவர்களுக்கும் பொருந்தாது. போர்க்காலத்தில் உயிரைக் கொடுத்து உழைத்த மருத்துவர்களுக்கு அது பொருந்தாது. பெருந்தொற்றுநோய் காலத்தில் உயிரைக் கொடுத்து உழைத்த மருத்துவர்களுக்கு அது பொருந்தாது. இப்பொழுதும் தொழிலைத் தொண்டாகச் செய்யும் மருத்துவர்களுக்கு அது பொருந்தாது.

அரச மருத்துவமனையை தர்மாஸ்திரியாக பார்க்கும் மக்கள் அங்கு மருத்துவர்கள் தாதியர்களும் தாங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு தர்மமாக இல்லை எனும் பொழுது அதிருப்தி அடைகிறார்கள், கோபமடைகிறார்கள். குறிப்பாக தனியார் மருத்துவத்துறை மீதான விமர்சனங்கள் அந்தக் கோபத்தை அதிகப்படுத்துகின்றன. அந்தக் கோபங்களை கேள்விகளை அதிருப்தியை அர்ஜுனா குவிமயப் படுத்தினார். அதனால்தான் சாவகச்சேரியில் அத்தனை மக்கள் திரண்டார்கள். சில நாட்களுக்கு முன் சம்பந்தரின் அஞ்சலி நிகழ்வில் திரண்டதைவிட அதிக தொகையினர் ஒரே நேரத்தில் திரண்டார்கள்.

அர்ஜுனா எப்பொழுதும் நேரலையில் தோன்றினார் அதுதான் அவருடைய பலம். பின்னர் அதுவே அவருக்கு பலவீனமாகவும் மாறியது. அரச மருத்துவமனைகளை தர்மாஸ்பத்திரிகளாக கருதும் ஒரு சமூகத்தின் மத்தியில் மருத்துவர்களுக்கு உயர்வான பவித்திரமான ஒரு இடம் உண்டு.பொதுவாக மருத்துவர்கள் அந்த பவித்திரமான ஸ்தானத்தை விட்டு வெளியே வர விரும்புவதில்லை. ஆனால் அர்ஜுனா வெளியே வந்தார். பல மாதங்களுக்கு முன் கண்டாவளையைச் சேர்ந்த ஒரு பெண் மருத்துவர் வெளியே வந்தார். இப்பொழுது முகநூலில் சில மருத்துவர்கள் அவ்வாறு வெளியே வருகிறார்கள். ஆனால் இவர்கள் அனைவரும் விதிவிலக்கு. பொதுவான மருத்துவர் குணம் என்பது தனக்குரிய பவித்திரமான ஸ்தானத்தைப் பேணுவதுதான்.

ஆனால் அர்ஜுனா அப்படியல்ல.அவர் மருத்துவர்கள் தொடர்பாக தமிழ்ச் சமூகத்தில் கட்டியெழுப்பப்பட்ட பொதுவான பிம்பத்துக்கு வெளியே நிற்கிறார். நேரலை மூலம் அவர் சமூக வலைத்தளங்களில் கட்டியெழுப்பியிருக்கும் பிம்பமும் திடீர் வீக்கமாக இருக்கலாம். அவர் தன்னுடைய தனிப்பட்ட தவறுகளை, பலவீனங்களை சிஸ்டத்தின் மீதான விமர்சனங்களாக மாற்றுவதில் வெற்றி கண்டு விட்டார் என்ற ஒரு விமர்சனமும் உண்டு.



எனினும், அவர் சார்ந்த சிஸ்டத்தின் மீது அவர் எழுப்பியிருக்கும் கேள்விகள் விசாரணைக்குரியவை. திணைக்களம் சார்ந்த உள்ளக விசாரணைகள் உண்மைகளை வெளியே கொண்டு வரலாம். அல்லது ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் அதை மணந்து கண்டுபிடிக்கலாம். அர்ஜுனா எழுப்பிய கேள்விகள் தொடர்பாக உண்மைகளை புலனாய்ந்து வெளியே கொண்டுவர வேண்டிய துறைசார் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. அது ஊடகத்துறை சார்ந்த பொறுப்புக் கூறல்.

அதேசமயம் துறைசார் அரச உயர் அதிகாரிகள் அவர் எழுப்பிய கேள்விகள் தொடர்பாக மக்களுக்கு பதில்கூற வேண்டும். அதைவிட முக்கியமாக அர்ஜுனா ஒரு பொறியைத் தட்டிப்போட்டதும் அது எப்படி சாவகச்சேரியில் தீயாகப் பரவியது என்பதற்குரிய சமூக உளவியலையும் தொகுத்து ஆய்வுசெய்ய வேண்டும். அர்ஜுனாவின் கலகம் வெற்றிடத்தில் இருந்து தோன்றவில்லை. அது ஏற்கனவே சமூக மட்டத்தில் பரவலாகக் காணப்பட்ட அதிருப்தி, கோபம், பயம், சந்தேகம் போன்றவற்றின் தொகுக்கப்பட்ட விளைவுதான். ஏற்கனவே பொதுப் புத்திக்குள் இருந்த பயங்களையும் கோபத்தையும் அதிருப்தியையும் அர்ஜுனா ஒருங்குவித்தார் என்பது தான் சரி.

அர்ஜுனாவின் விமர்சனங்கள் விவகாரம் ஆகிய பின் சில நாட்கள் கழித்து யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஒரு குறிப்பை முகநூலில் போட்டார். அது போதனா வைத்தியசாலை மீதான விமர்சனங்களுக்குப் பதில் கூறும் நோக்கிலானது. ஆனால் அதற்கு கீழே வந்த கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால், 500க்கும் அதிகமான கருத்துக்களில் 90 விகிதத்துக்கும் அதிகமானவை மருத்துவத் துறைக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைப்பவை. அதில் ஒரு செய்தியுண்டு. பொதுசன மனோநிலை ஏன் அவ்வாறு அதிருப்தியோடும் கோபத்தோடும் காணப்படுகின்றது?

ஒரு சமூகத்தின் குறிப்பிட்ட ஒரு துறைசார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பு அதிகரிப்பது நல்லது. ஒவ்வொருவரும் தொழில் சார்ந்தும் அறம் சார்ந்தும் குறைந்தது மனச்சாட்சிக்காவது பொறுப்புக்கூற வேண்டும். ஒரு மருத்துவர் கூறியதுபோல, பொது வைத்தியசாலைகளில் கழிப்பறைகளை பயன்படுத்துவதிலும் பொதுச்சொத்தை நுகர்வதிலும் பொதுமக்கள் எவ்வளவு தூரம் பொறுப்போடு காணப்படுகிறார்கள்? எல்லாப் பொது மருத்துவமனைகளிலும் கழிப்பறைகள் மோசமாகக் காணப்படுகின்றன. ஏன் அதிகம் போவான்? முருகண்டியில் கழிப்பறைக்குக் காசு வாங்கப்படுகின்றது. ஆனால் அந்தக் கழிப்பறையின் சுகாதாரச்சூழல் எப்படியிருக்கிறது? மேற்கத்திய சமூகத்தின் சமூகப் பொறுப்பை கண்டுபிடிக்கக் கூடிய இடங்களில் ஒன்று கழிப்பறைகள் ஆகும். அங்கே பொதுக் கழிப்பறைகள் சுத்தமாக இருக்கும். அது நலன்புரி அரசுக் கட்டமைப்பு. தவிர அங்கே கழிப்பறைகள் உலர்ந்தவை. ஆனால் நமது கழிப்பறைகளோ ஈரமானவை. எனவே எமது சூழலுக்கு ஏற்ப வித்தியாசமாகச் சிந்தித்து கழிப்பறைகளில் சுத்தத்தைப் பேண வேண்டும். ஆனால் பொதுக் கழிப்பறைகளை வைத்து ஒரு சமூகத்தின் பொறுப்புணர்ச்சியை மதிப்பிடலாம். எனவே பொறுப்புக்கூறல் எல்லாத் தளங்களிலும் உறுதி செய்யப்பட வேண்டும். பொதுமக்களில் தொடங்கி அரசாங்கம் வரை அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை பொறுப்புக்கூறல் என்ற வார்த்தைக்கு அதிகம் பிரயோக அழுத்தம் உண்டு. அரசியல் அடர்த்தி உண்டு. 2015 ஆம் ஆண்டு ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் பொறுப்புக் கூறலுக்கானது. அதாவது நிலைமாறு கால நீதிக்கு உரியது. ஆனால் அது தோற்கடிக்கப்பட்டது. இனப்படுகொலைக்கு யாருமே இது வரை பொறுப்புக் கூறவில்லை. இவ்வாறு அரசியல் அர்த்தத்தில் பொறுப்புக் கூறப்படாத ஒரு நாட்டுக்குள், அல்லது பொறுப்புக்கூற யாருமற்ற ஒரு நாட்டுக்குள், பொறுப்புக் கூறலை பன்னாட்டு நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்கும் ஒரு சிறிய மக்கள் கூட்டம், தனக்குள்ளும் அந்தந்தத் துறை சார்ந்து அல்லது ஆகக்குறைந்தது அவரவர் தமது மனச்சாட்சிக்காவது பொறுப்புக் கூறத்தானே வேண்டும்?


**அரச மருத்துவமனையை தர்மாஸ்திரியாக பார்க்கும் மக்கள் அங்கு மருத்துவர்கள் தாதியர்களும் தாங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு தர்மமாக இல்லை எனும் பொழுது அதிருப்தி அடைகிறார்கள், கோபமடைகிறார்கள். குறிப்பாக தனியார் மருத்துவத்துறை மீதான விமர்சனங்கள் அந்தக் கோபத்தை அதிகப்படுத்துகின்றன. அந்தக் கோபங்களை கேள்விகளை அதிருப்தியை அர்ஜுனா குவிமயப்படுத்தினார். அதனால்தான் சாவகச்சேரியில் அத்தனை மக்கள் திரண்டார்கள்**

# ஜனாதிபதியின் விசேட அபிவிருத்தி நிதி 6 கோடி

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு கிடைத்தது.







தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதியின் விசேட அபிவிருத்தி நிதி சுமார் 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலகத்திற்கு அறிவித்தல் கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளிவாகியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிசேட அபிவிருத்தி நிதி என்ற பெயரில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிதி தமக்கு வழங்கப்படாமைக்கான காரணம் என்ன என மீண்டும் கடந்த ஜூன் மாதம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், கேள்வி எழுப்பியிருந்த நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சுமார் 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான அறிவிப்பு யாழ். மாவட்டச் செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றிருக்கின்றது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு 4 கோடியே 60 லட்சம் ரூபாயும், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனுக்கு 2 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதே வேளை ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், செல்வம் அடைக்கலாநாதன், சித்தார்த்தன் உள்ளிட்டோருக்கு ஜனாதிபதியின் விசேட அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் 4 கோடி ரூபாய் விசேட அபிவிருத்தி நிதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஆனைக்கோட்டை

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் வாழ்நாள் பேராசிரியர் புஸ்பரட்ணம்

யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்லியல் பொருட்களை யாழ்.பல்கலைக் கழகத்தில் காட்சிப்படுத்த ஒழுங்குகள் செய்யப்படுவதாக யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர், வாழ்நாள் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய சமூக முன்னேற்ற மையத்தின் மரபுரிமை அலகின் நிதி பங்களிப்புடன், யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடன் ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த வாரம் யாழ். பண்பாட்டு மையத்தில் நடந்தது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன்போது மேலும் அவர் கூறுகையில், ஆனைக்கோட்டை பகுதியில் கடந்த ஒரு மாதகாலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்டவற்றை ஆய்வு செய்யும் நடைமுறைகளை இனிமேல்தான் முன்னெடுக்க வேண்டும். எம்மால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொல்லியல் பொருட்களை யாழ்.பல்கலையில் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனால் அவற்றை விரைவில் பல்கலைக்கழகத்தில் காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யவுள்ளோம்.

பலரிடமும் ஒரு கேள்வி இருக்கிறது, தொல்லியல் ஆய்வினை ஏன் ஆனைக்கோட்டையில் செய்தார்கள்? என பலருக்கு ஆனைகோட்டையின் வரலாறு தெரியாது. ஆனைக்கோட்டையில் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே ஆய்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டது. அந்த ஆய்வு பணிகளின் போது, யாழ்ப்பாணத்தில் 2300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒருவரின் எலும்புக் கூடு கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் கீழ் நிவேதிய பொருட்களையும், முத்திரை மோதிரங்களும் மீட்கப்பட்டன. அவை சிந்துவெளி காலத்திற்கு உரியது. அவற்றில் பிரமி எழுத்துக்களும் காணப்பட்டன. அதில் இன குழுமம் ஒன்றின் தலைவனின் பெயர் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அந்த தொல்லியல் பொருட்களை 1998 ஆம் ஆண்டு இழந்துள்ளோம். இந்த நிலையிலையே மீண்டும் கடந்த ஜூன் மாதம் முதல் அகழ்வாய்வு பணிகளை மீள மேற்கொள்ளப்பட்டது. 1980களில் நவீன தொழினுட்பங்கள் இருக்கவில்லை. ஆனால் தற்போது நவீன தொழினுட்பங்கள் இன்றி மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வுகள், விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்த முடியாது. அதனால் இலங்கையில் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களின் உதவியுடன், மிக பிரமாண்டமாக ஆனைக்கோட்டை பகுதியில் கடந்த ஒரு மாதகாலமாக அகழ்வாய்வுகளை மேற்கொண்டோம்.

எமது ஆய்வு நடவடிக்கையில் கற்காலத்திற்கு முற்பட்ட ஆய்வுகளை மேற்கொண்ட அனுபவம் வாய்ந்தவர்கள். என்புகளை ஆய்வு செய்து காலத்தை கண்டறிய கூடியவர்கள் என பலதரப்பட்டவர்களை ஒன்றிணைத்தே முன்னெடுத்தோம்.

இந்த அகழ்வு ஆய்வின் போது புலமையானவர்களின் பங்களிப்புடன், தொல்லியல் மாணவர்களின் பங்கும் மிக முக்கியமாக இருந்தது. அவர்கள் வகுப்பறையில் கற்பதை விட செயல்முறை ஊடாக கற்பதே சிறந்தது. அதனால் பல மாணவர்கள் ஆர்வத்துடன் பணியாற்றினார்கள் என மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தலில் எங்களின் வாக்கை

## தமிழ் பொது வேட்பாளருக்கு அளிப்போம்! மக்களை கோருகிறார் க.வி.விக்னேஸ்வரன்!

நாங்கள் யாவரும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எங்களின் வாக்குகளை அளிப்போம்”- என்று அழைப்பு விடுத்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன்.



முதலாவது தேசிய மாநாடு கடந்த வாரம் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது. இதற்கு தலைமை தாங்கி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அவரின் உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு. வட கிழக்கு தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை ஜனாதிபதி தேர்தலில் முன்னிறுத்த வேண்டும் என்ற நிலைக்கு எம்மைக் கூட்டி வந்துள்ளன. ஒஸ்லோ தீர்மானம், சிங்கள வாக்காளரிடையே வளரக்கூடிய வெறுப்பு நிலை என்றெல்லாம் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தவர்கள் தற்போது போதிய அளவு ஆதரவு வாக்குகளை பொது வேட்பாளர் பெறாவிட்டால் என்ன நடக்கும் என்று கேள்வி எழுப்பி வருகின்றார்கள். தேர்தல் போட்டி ஒன்றில் ஆர்வத்துடன் ஈடுபடுபவர் ”நான் கட்டாயம் தோற்கப் போகின்றேன்” என்ற மனோநிலையுடன் போட்டியிடுவதில்லை. ”மக்களை என் பக்கம் திருப்ப முடியும் அவர்களின் வாக்குகளைப் பெறமுடியும்” என்று எண்ணியே தேர்தலில் நிற்கின்றார். இவ்வாறான முரண்நிலைகளில் நின்று கருத்துரைப்பவர்கள் தாமும் சேர்ந்து பொது வேட்பாளருக்கு ஆதரவைத் தெரிவித்தால் என்ன நடக்கும் என்று சிந்திப்பதில்லை. முரண்நிலைகளில் நிற்கும் எமது சகோதர சகோதரிகள் யாவரும் எமது தமிழ் உறவுகளே. ஆகவே, நாம் யாவரும் தமிழர்களாக எமது வருங்காலம் பற்றி சிந்திப்பது அவசியமாகும்.

முரண்நிலைகளில் நின்று அடம் பிடிப்பது தமிழர்களின் பிறவிக்குணம். தான் மற்றவரிலும் பார்க்கக் கெட்டிக்காரன் என்று உலகுக்கு எடுத்தியம்ப வேண்டும் என்ற ஏக்கமே இவ்வாறான நடத்தைக்குக் காரணமோ நான் அறியேன்.எது எவ்வாறு இருப்பினும் நாம் யாவரும் தமிழர்களாக சிந்தித்தால் எமது வாரிசுகளின் வருங்காலம் பற்றிய கரிசனை எம்மை கட்டாயமாக ஆட் கொள்ளும். ”நாங்கள் இன்று சொகுசாக வாழ்ந்துவிட்டு போவோம், நாளை எமது பிள்ளைகளுக்கும் தமிழ் மக்களுக்கும் என்ன நடந்தால் எமக்கென்ன” என்று சிந்திப்பவர்கள் தான் பல பிழையான கருத்துகளை தமிழ் மக்களிடையே விதைத்து வருகிறார்கள். அதுவும் கொழும்பில் எனது தமிழ் நண்பர்களின் சிந்தனை பொதுவாக ஒரேவாறாகச் செல்வதை நான் காண்கின்றேன். அவர்கள் என்னிடம் கேட்டதுண்டு ”நாங்கள் யாவரும் இலங்கையர்கள் தானே? ஏன் நாங்கள் தமிழர்களாகச் சிந்திக்க வேண்டும்?” என்று.

அவர்களுக்கு நான் கூறும் பதில் ஒன்று தான். ”நாம் ஒரு நாட்டு மக்கள் என்பதில் எந்தவித முரண் கருத்துக்கும் இடமில்லை. ஆனால், வட,கிழக்கு வெறும் சிறு மாகாண தமிழ் மக்கள் வெறும் சிறுபான்மையினர் அல்ல. அவர்கள் வட கிழக்கின் பெரும்பான்மையினர். ஆகவே, எமக்கான தனித்துவத்தை பெரும்பான்மையினர் ஏற்காது இவ்வாறு கூறினால் ”நீங்கள் எங்களுடன் சேருங்கள். எங்களுடன் ஐக்கியமாகி விடுங்கள்” என்பதுதான் அதன் அர்த்தம். அதாவது எமது தனித்துவத்தை நாங்கள் மறந்துவிட வேண்டும். கூடிய விரைவில் இந்நாட்டு மக்கள் யாவரும் சிங்கள பௌத்தர்களாக மாற வேண்டும் என்பதே அதன் உள்ளர்த்தம். ஆங்கில மொழிப் பிணைப்பால் நாங்கள் வேற்றுமையில் ஒற்றுமை கண்டோம். ஆனால், இன்று சிங்கள மொழி மூலம் ஒற்றுமை தேடுபவர்கள் எம்மை ஆட்கொண்டு ஆள வேண்டும் என்ற எண்ணத்திலேயே செயலாற்றுகின்றனர்” என்று கூறுவேன். இந் நாட்டில் எமது சிங்கள வேட்பாளருக்குத் தமிழ் மக்கள் வாக்களித்தால் அது ஒற்றுமை யாகாது.அது சிறுபான்மையினரின் பயத்தின் அறிகுறி. ”எமக்கு என்ன நடக்குமோ என்ற பீதியில் தான் நாங்கள் உங்களுக்கு வாக்களித்தோம்” என்று கூறாமல் எம்மவர் ”நாம் எல்லோரும் ஒரு நாட்டு மக்களே அதனால்த் தான் உங்களுக்கு நாம் வாக்களித்தோம்” என்று கூறத்தலைப்படுகின்றார்கள். அது தவறான வழி முறை. தவறான கூற்று. அவ்வாறு சிந்தித்து நடந்து கொண்டால் எமது தனித்துவம் பறிபோய்விடும். எமது காணிகளும் வளங்களும் சூறையாடப் பட்டுவிடுவன. எமது தொழில்கள், கைத்தொழில்கள் போன்ற பலவற்றிலும் இருந்து எம்மைப் பெரும்பான்மையினர் வெளியேற்றிவிடுவார்கள். வெளிநாடுகளுக்கு செல்வதே எமக்கிருக்கும் ஒரே தேர்வாக வந்துவிடும். பலருக்கு இன்று வெளிநாடு செல்வதே ஒரேயொரு தேர்வாகப்படுகின்றது. படித்த பல்தொழில் விற்பன்னர்கள் கூட எம்மைவிட்டு வெளிநாடு போகவே விருப்பப்படுகின்றார்கள். எமது சனத்தொகை வெகுவாக குறைந்து வருகின்றது. எங்களுடைய கட்சியின் இந்த தேசிய மகாநாட்டில் நாங்கள் யாவரும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எங்களின் வாக்குகளை அளிப்போம் என்று உறுதி பூணுவோமாக - என்றார்.

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் தமிழ் பொது வேட்பாளர் தெளிவூட்டல் கருத்தரங்கு!

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பொது மக்களுக்கு தெளிவூட்டும் கருத்தரங்கு ஒன்று கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா வாடி வீட்டில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வட மாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் தமிழ் மக்கள் பொது வேட்பாளரின் அவசியம் குறித்து உரையாற்றினர்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசியின் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில பலர் கலந்து கொண்டனர்

## மண்ணித்தலை, கௌதாரிமுனையில் உள்ள புராதன இந்து ஆலயங்கள் அடுத்த மாதம் சீரமைப்பு!

தொன்மை வாய்ந்த மண்ணித்தலை சிவன் ஆலயம் மற்றும் கௌதாரி முனை பிள்ளையார் ஆலயம் என்பவற்றின் சீரமைப்புப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை தொல்லியல் திணைக்களத்தால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சோழர் காலத்துக்குரியது என நம்பப்படும் மண்ணித்தலை சிவன் கோவில் மற்றும் கௌதாரிமுனை பிள்ளையார் ஆலயம் என்பன தொன்மை வாய்ந்த தலங்களாக தொல்லியல் திணைக்களத்தால் அடையாளப் படுத்தபட்டிருந்த நிலையில், அவற்றின் புனரமைப்புக்காக 8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே அடுத்தமாதம் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.




# புதைந்தேதான் போகுமா மனிதப் புதைகுழி?

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வந்து, புதைகுழி மூடப்பட்டிருக்கின்றது. 50க்கும் மேற்பட்ட மனித எச்சங்கள், விடுதலைப்புலிகளுடையதாக இருக்கலாம் என்று கருதப்படும் பச்சை நிற உடைகள், சயனைட் குப்பிகள், த.வி.பு என்று அடையாளமிடப்பட்ட இலக்கத் தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள். போர் எச்சங்கள் என ஏதோவொரு சம்பவத்தின் சாட்சியத்தின் வலுவாகவே அந்தப் புதைகுழி பதிவு செய்திருக்கின்றது. புதைகுழிகள் இலங்கைக்குப் புதியன அல்ல. அவற்றின் பால் ஏற்பட்ட பட்டனுபவத்தால், கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழியொன்று உள்ளதாக 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதன்முதல் வெளிப்படுத் தப்பட்டபோது தமிழர் தாயகத்திலிருந்து பெரும் கவனக்குறைவு இந்தவிடயத்தில் செலுத்தப்படவே செய்தது. எனினும், நாம் அனைவரும் சந்தேகப்பட்டதைவிடவும், நிபுணர்கள் எதிர்வுகூறியதைவிடவும் பல மடங்கு பெரிதானதாகவும் ஏராளம் தடயங்கள் மற்றும் எச்சங்களைக் கொண்டதாகவுமே புதைகுழி அமைந்திருந்தது.

ஆனால், இறுதிப்போர் தொடர்பான விடயங்கள் எப்போதெல்லாம் வெளிச்சத்துக்கு வருகின்றனவோ எப்போதெல்லாம் இவ்வாறான விடயங்கள் பேசு பொருள் ஆகின்றனவோ, அப்போதெல்லாம் ஒருவித மெத்தனப்போக்கையே அரசாங்கம் கைக்கொண்டது. அதன் தொடர்ச்சியாகவே கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரத்திலும் அரசாங்கம் நடந்து கொள்ள எத்தனித்தது. அதைத்தாண்டியும் மூன்று கட்டங்களாக இந்தப் புதைகுழியில் அகழ்வுப்பணிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன என்றால், அதற்குத் தமிழர் தாயகத்திலிருந்து வெளிப்படுத்தப் பட்ட அழுத்தமும் பிரதான காரணம் என் பதை அவ்வளவு இலகுவில் மறுத்துவிட முடியாது. ஆனால், இதற்கு முன்னரும் எத்தனையோ மனிதப்புதைகுழிகள் தாயகத்திலும் தாயகத்துக்கு வெளியிலும் அவதானிக் கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் அந்த மனிதப் புதைகுழிகள் அதிகாரக் கதிரைகளின் அழுத்தத்தால் மூடி மறைக்கப்பட்டனவே அன்றி நீதியானதும் நியாயமானதுமான விசாரணைகளையும் தீர்ப்புகளையும் எதிர்கொள்ளவேயில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும் அவ்வாறான மழுங்கடித்தல்கள் இடம்பெற்றுவிடாது தடுப்பதற்காக நாம் அனைவரும் ஓரணியிலும் மிக மிக அவதானமாகவும் இருக்கவேண்டிய காலமிது. கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனிதப் புதைகுழி விவகாரங்களிலும் சர்வதேசம் தலையிடுவதற்கான ஓர் ஆரம்பப் புள்ளியாகவும் இந்த விவகாரத்தை நாம் மாற்றிக் கொள்ளமுடியும். அதற்குரிய இயலுமை கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழிக்கு இருக்கவே செய்கின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற 10 நாள்களில் 6 நாள்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி பணிகளை நேரடியாகக் கண்காணித்தார். அமெரிக்கத் தூதரக அதிகாரிகளும், “காணாமலாக்கப்பட்ட வர்களின் குரல்களுக்காக தாமும் அகழ்வுகளைக் கண்காணிக்கின்றோம்“ என்று தெரிவித்து அகழ்வுப் பணிகளில் கலந்து கொண்டிருந்தனர். இவை, இந்த விடயத்தில் சர்வதேசம் கொண்டுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தும் நிலையில், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தை மிகமிகத் தீவிரமானதாகவும், பாரதூரமானதாகவும் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் பேசு பொருளாக்க வேண்டியது தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடையதும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களினதும் பிரதான கடமையாகும். உண்மைகளை வெளிக் கொண்டு வரும் மெய்யான அகழ்வுப்பணிகளை ஆரம்பிக்கப்போகின்றோமா? அல்லது புதைகுழி புதைந்தேதான் போகப்போகின்றதா? என்பதை நாமும் நம் தலைவர்களும் தான் தீர்மானிக்கவேண்டும்.


அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.**

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | |
|---|---|
| சுன்னாகம் | 021 224 2022 |
| நெல்லியடி | 021 226 0700 |
| பருத்தித்துறை | 021 226 1100 |
| ஆவரங்கால் | 021 222 6688 |
| சித்தங்கேணி | 021 225 2500 |
| சாவகச்சேரி | 021 227 0700 |
| பூநகரி | 021 320 1818 |
| முழங்காவில் | 021 300 6544 |
| விஸ்வமடு | 021 320 1515 |
| மன்னார் | 023 225 1656 |
| கிளிநொச்சி | 021 228 5505 |
| வவுனியா | 024 222 7777 |







இப்பத்திரிகை 24.07.2024 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது.